2017 மார்ச் 22
புதன்
விலை: 20/-
ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 22 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 047
NAVAMANI DAILY
நவமணி දිනපතා
QD / 154 / NEWS / 2017

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமா



சோவியத் – இலங்கை உறவில் திருப்புமுனையாக அமையும் ஜனாதிபதியின் விஜயம் 04




இலங்கை அணியின் தலைவராக மிலிந்த 12



கொழும்பிலிருந்து பூர்வீகக்குடிகள் வெளியேற்றப்பட மாட்டார்கள் 07

# அளுத்கம கலவரத்தில்

## பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு

### வழங்கக்கோருகிறார் அமைச்சர் ஹிஸ்புல்லா



■ அ.அருண் பிரசாந்த்

அளுத்கம கலவரத்தில் பலியான மூவரின் குடும்பங்களுக்கும், காயமடைந்த 15 பேருக்கும், இதனால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட 280 குடும்பங்களுக்கும் அரசு உடனடியாக நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு ராஜாங்க அமைச்சரான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா நேற்று சபையில் வலியுறுத்தினார். பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

11 »»»»

## மேல் நீதிமன்றமும் விமலுக்கு பிணை வழங்க மறுப்பு



அரச வாகனங்களை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு

11 »»»»

## சர்வதேச நீதிபதிகள் வர இலங்கை அனுமதிக்காது

### பாராளுமன்றத்தில் பிரதமர்

■ அ.அருண் பிரசாந்த்

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கு அமைய நீதிக்கட்டமைப்பு ஒன்று நாட்டில் ஏற்படுத்தப்பட்டாலும் அது அரசியலமைப்பின் பிரகாரமே அமையும். அத்தோடு, ஒற்றையாட்சிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அரசு ஒருபோதும் செயற்படாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் கூறினார். ஜெனிவாத் தீர்மானம் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டைத் தெரிவித்து

11 »»»»

## இனவாதத்தை கக்கும் ஆதித்திய நாத் உத்தரப்பிரதேச முதலமைச்சராக நியமனம்

### மோடி மீதான நம்பிக்கையை இழக்க செய்கிறது என்கிறார் சுஹைர்



■ ஆதில் அலி சப்ரி

தீவிர இனவாத சிந்தனையுடன் செயற்படும் ஒருவரை இந்தியாவின் உத்தர பிரதேச முதலமைச்சராக நியமித்திருப்பது இந்திய பிரதமர் நரேந்திர மோடி மீதான நம்பிக்கையை மேலும் இழக்கச் செய்துள்ளதாகவும், தீவிரவாதத்துக்கு துணைபோவது முழு பிராந்தியத்துக்கும் பாதிப்பாக அமையலாம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி

11 »»»»

## ஊடகவியலாளர் கீத்தை துன்புறுத்திய இராணுவ வீரர் கைது



ஊடகவியலாளர் கீத் நொயார் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில், மேலும் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான பிரியந்த ஜயகொடி தெரிவித்தார். வேகொவ்வ பிரதேசத்தைச் சேர்ந்த, 34 வயதான

11 »»»»

## இலங்கை தொடர்ந்தும் கவலையில்...

உலகின் மிக மகிழ்ச்சியான நாடாக நோர்வே தெரிவாகியுள்ளது. இதில் இலங்கைக்கு 120ஆவது இடமே கிடைத்துள்ளது.

11 »»»»




திருமலை மாவட்டத்தில் டெங்கு அகோரம் காரணமாக 16 உயிர்கள் பலியெடுக்கப்பட்ட பின் டெங்கு நுளம்புகளை தேடி ஒழிப்பதற்கான விஷேட செயற்றிட்டங்கள் நாளாந்தம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. நேற்று திருகோணமலை மேல் நீதிமன்ற வளவில் நீதிபதி ஏ.பிரேமசங்கர் தலைமையில் சுத்திகரிப்பு பணிகள் நடைபெற்றதை படத்தில் காணலாம். (படம்: திருமலை ஏ.எஸ். யாசீம்)

## பலஸ்தீன், காஷ்மீர் மக்களுக்காக ஜெனீவாவில் குரல் கொடுத்த அக்குறணை யுவதி




ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 34 ஆவது மாநாட்டின் சமாந்தர நிகழ்வில், இலங்கையின் அக்குறணையைச் சோந்த ஷமா முயிஸ், காஷ்மீர் மற்றும் பலஸ்தீன் மக்களின் நிலை பற்றி உரையாற்றினார்.

இம்மாதம் 15 ஆம் திகதி, 05 வயதான கின்ஸா மற்றும் 14 வயதான அமீன் ஆகியோரை இந்திய இராணுவம் படுகொலையை செய்திருந்ததைக்

11 »»»»

## சிறந்த நிதி அமைச்சர் விருது பெற ரவி லண்டன் செல்கிறார்

■ பீ.எப்.எம் றிஷாட்

சர்வதேச நிதி கட்டமைப்பில் அதிக வரவேற்பைக் கொண்டுள்ள பிரித்தானிய த பேங்கர் சஞ்சிகையின் தரவரிசையின் படி நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆசிய பசுபிக் வலையத்தின் சிறந்த நிதி அமைச்சர் விருதினை பெற்றுக்கொள்ள பிரித்தானியா செல்லவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்படுவதாவது,

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை வினைத்திறன் மிக்க முறையில் முகாமைத்துவம் செய்து,



11 »»»»

## கிழக்கில் டெங்கு பரவும் வகையில் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக கடுமையாக சட்டத்தை அமுல் செய்க

டெங்கு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராகத் தயவு தாட்சணையின்றி கடுமையாக சட்டத்தை அமுல் நடத்துமாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமத் நேற்று அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

11 »»»»

## கிண்ணியாவிற்கு ரூ 180 இலட்சம் செலவில் அவசர சத்திரசிகிச்சை பிரிவு

### பாராளுமன்றத்தில் பைசல் காசிம்

கிண்ணியாவில் வேகமாக பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 180 இலட்சம் ரூபா செலவில் அவசர சிகிச்சைப் பிரிவொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார பிரதியமைச்சரான பைசல் காசிம் தெரிவித்தார்.

அதேநேரம், நாடளாவிய ரீதியாக டெங்கு நோயினால் இதுவரை 22 ஆயிரத்து 562 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 39 பேர் பலியாகியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதுவிவகாரம் தொடர்பில் பாராளுமன்றில் நேற்று கருத்து வெளியிட்ட அவர்,

டெங்கு நோயினால் திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் 1610 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 14 பேர் பலியாகியுள்ளனர் என்று தற்போது உறுதியாகத் தெரியவந்துள்ளது. யாழில், 1387 பேரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

11 »»»»



# கிழக்கில் தீவிரமாக பரவிவரும் டெங்கை கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு முறையான திட்டங்களை வகுக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் உதுமாலெப்பை





(றியாஸ் ஆதம், எப். முபாரக்)

கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள கிண்ணியா வைத்தியசாலையை கிழக்கு மாகாணத்தினால் பராமரிக்க முடியாவிட்டால் அதனை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு செல்வதற்கு விடுவிக்குமாறு கிண்ணியா பிரதேச மக்கள் கோரிக்கை விடுப்பதாக கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ் உதுமாலெப்பை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் 75ஆவது சபை அமர்வு நேற்று (21) தவிசாளர் சந்திரதாச கலப்பதி தலைமையில் நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தில் தீவிரமாக பரவிவரும் டெங்கு நோயினை கட்டுப்படுத்துவது தொடர்பான அவசரப் பிரேரணையினை சமர்ப்பித்து உரையாற்றுகையிலே உதுமாலெப்பை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோயினால் சுமார் 4000 பேர் பாதிக்கப்பட்டிருப்பதுடன் பலபேர் உயிரிழந்தும் உள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பிரதேசத்தில் டெங்கு நோயினால் இதுவரை 15பேர் உயிரிழந்துள்ளனர். மிகத் தீவிரமாகப் பரவிவரும் டெங்கு நோயினால் அம்பாறை மாவட்டத்தில் நானும் எனது குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளம் தாயை இழந்துள்ளேன்.

குறிப்பாக கிண்ணியா பிரதேசத்தில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் மத்திய மாகாண சுகாதார அமைச்சுக்களும் உள்ளூராட்சி அமைச்சும் இணைந்து டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த போதிலும், கிண்ணியா பிரதேசத்தில் இதுவரைக்கும் டெங்கு நோயை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் 60% பகுதிகளிலேயே துப்பரவு செய்யப்பட்டு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிண்ணியா பிரதேசத்தில் மிகுதியாக உள்ள 40%மான பகுதிகளில் எவ்விதமான டெங்கு தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் இருப்பதனால் இப்பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பெருக்கம் அதிகமாக உள்ளதால் இப்பிரதேச மக்களும் டெங்கு நோய் பாதிப்புக்கு உள்ளாக்கப்படும் அபாயநிலை உருவாகியுள்ளது.

சுமார் ஒரு லட்சம் மக்கள் வாழும் கிண்ணியா பிரதேசத்தில் அமைந்துள்ள தள வைத்தியசாலை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள டெங்கு நோயினை கட்டுப்படுத்துவதற்கு மத்திய சுகாதார அமைச்சு பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கிழக்கு மாகாண சபையின் அதிகாரம் எங்களிடம் இருக்கத்தக்கதாக கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள கிண்ணியா பிரதேச நோயாளர்களுக்கு அத்தியாவசியத் தேவையான கட்டில்களையும் அவசிய வைத்திய உபகரணங்களையும் வழங்குவதற்கு முடியாமல் உள்ளமை கவலையளிக்கிறது.

எனவே, கிழக்கு மாகாண சபையின் விசேட நிதியினை அவசரமாக ஒதுக்கி கிண்ணியா தள வைத்திசாலையில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு கட்டில் மற்றும் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் உரையாற்றுகையில்,

திருகோணமலையில் பரவி வருவது டெங்கு நோயா அல்லாவிடின் வேறேதும் ஆட்கொல்லி வைரஸ் நோயா என்பது தொடர்பில் பொதுமக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விசேட வைத்திய நிபுணர் குழுவால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

டெங்கு நோய்த் தாக்கத்தில் மூதூர் பிரதேசத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் அதிகளவான உயிரிழப்புகள் கிண்ணியாப் பிரதேசத்திலேயே இடம்பெறுகின்றது. இதற்குக் காரணம் போதிய சிகிச்சை கிடைக்காமல் உள்ளதா? அல்லது வேறேதேனும் பிரச்சினையா? என்பது தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

# ரொட்டவெவ-புளியங்குளம் விவசாயிகள் விவசாய செய்கைக்கு அனுமதிக்கப்பட வேண்டும்

## இம்ரான் எம்.பி



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவிற்குற்பட்ட ரொட்டவெவ, புளியங்குளம் பிரதேசத்தின் சின்ன புளியங்குளம், பெரிய புளியங்குளம் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் அனுமதிக்கப்பட வேண்டும் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை விடுத்தார்.

திங்கட்கிழமை (20) நடைபெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

இப்பகுதியில் 1990 க்கு முன்னர் பல வருட காலம் மக்கள் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வந்தனர். அதன் பின்னர் ஏற்பட்ட பயங்கரவாதச் சூழ்நிலை காரணமாக மக்கள் அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

கடந்த 2006 இல் கிழக்கு மீட்பின் பின்னர் இப்பகுதி விவசாயிகள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க 60 இலட்சம் ரூபா செலவில் இவ்விரு குளங்களும் புனரமைக்கப் பட்டதோடு இப்பகுதி வீதியும் புனரமைக்கப்பட்டது. எனினும் தற்போது வனபரிபாலனத் திணைக்களம் இப்பகுதிக்கு விவசாயிகள் அங்கு செல்லத் தடை விதித்துள்ளது. எனவே இத்தடை நீக்கப்பட்டு விவசாயச் செய்கைக்கு அனுமதிக்க வேண்டும் என இம்ரான் எம்.பி இதன் போது தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ரொட்டவெவ மிகப் பழைமை வாய்ந்த கிராமம். எனவே இந்த விடயம் குறித்து சாதகமான முறையில் பரிசீலிக்க வேண்டும் என்றார்.

இதன் போது அப்துல்லாஹ் மஹ்ரூப் எம்.பியும் கருத்து தெரிவித்தார்.

மக்களை அப்பகுதியில் விவசாயச் செய்கையில் ஈடுபட அனுமதிக்குமாறும் பாரிய மரங்களல்லாத மரங்களை துப்புரவு செய்ய அனுமதிக்குமாறும் அரசாங்க அதிபர் வனபரிபாலன அதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

# சிங்கள முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமைக்கு கைருல் பஷர் பங்களிப்புச் செய்தார்

(பேருவளை பீ.எம். முக்தார்)

நளீமிய்யாவின் பிரதிப் பணிப்பாளர் எச்.ஐ. கைருல் பசர் பிரதேசத்தில் சிங்கள, முஸ்லிம் சமூகங்களிடையே நல்லெண்ணத்தைக் கட்டி எழுப்புவதற்கு அளப்பரிய பங்களிப்புச் செய்தார் என பேருவளை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஏ.ஆர்.எம். பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மறைந்த விரிவுரையாளரது மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது,

தர்கா நகரில் பிறந்து வளர்ந்த அவர் தனது ஆளுமை மூலம் தர்காநகருக்கு பெரும் புகழ் சேர்த்தார். சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருடனும் மிக அன்பாக பண்பாக பழகி மக்கள் மனதை வென்ற மர்ஹூம் கைருல் பஷர் (நளீமி) தர்காநகர் பகுதியின் கல்வி, சமய, ஆன்மீக கல்வி, சமூக விடயங்களில் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டார்.

தர்கா நகர் ஜமாஅத் கவுன்ஸிலின் உப தலைவராக பதவி வகித்த அவர் ஊரின் முன்னேற்றத்தில் விசேட கரிசனை காட்டினார். தர்கா நகரில் ஸக்காத் விநியோகம் தொடர்பிலும் மார்க்க விடயங்களிலும் நல்ல அறிவுரைகளை அவ்வப்போது வழங்கினார்.

30 வருட காலமாக தர்காநகர் மூன்று ஜும்ஆப் பள்ளிவாசல்களிலும் கதீபாக இருந்து ஜும்ஆப் பிரசங்கம் நிகழ்த்தினார். அத்தோடு பெருநாள் தொழுகையும் கொத்பா பிரசங்கத்தையும் நிகழ்த்தி வந்தார். எவ்வித வேதனமும் பெறாது தர்காநகருக்கு இவர் தியாக உணர்வுடன் பணி செய்தார்.

அளுத்கமையில் இடம்பெற்ற வன்முறையின் போது சிங்கள - முஸ்லிம் உறவை கட்டி வளர்த்த இவர் என்னுடன் கைகோர்த்து செயல்பட்டார். பௌத்த விஹாரைகளில் இடம்பெற்ற சமாதான கூட்டங்களிலும் என்னுடன் சென்று புனித இஸ்லாம் மார்க்கம் பற்றி அடுத்த மத குருமார்களுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்தினார். தர்காநகரில் அமைதியை நிலை நாட்டவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுக்கவும் இவர் செய்த பணி பாராட்டுக்குரியதாகும்.

இவரின் திடீர் மறைவு தர்கா நகருக்கு பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

# அரநாயக்க “பீட்” அமைப்பின் இரத்ததான நிகழ்வு




அரநாயக்க கல்வி மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கான ''பீட்'' அமையம் மற்றும் கண்டி ஆதார வைத்தியசாலை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இரத்ததான நிகழ்வு வில்பொல அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று(19) நடைபெற்றது. நிகழ்வில் இன, மத பேதமின்றி ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டனர். (அரநாயக்க மர்யம் பாரா தாஹிர்)

# உடைந்த அறிவித்தல் பலகையும் குப்பைகளும்



(வத்துகாமம் நிருபர்)

கண்டி, வத்துகாமம் பிரதான வீதியில் மதீனா மத்திய கல்லூரி பிரதான மைதானத்திற்கு முன்பாக குப்பைகள் கொட்டவேண்டாம் என்ற அறிவித்தலை பாத்ததும்பறை பிதேச சபை காட்சிப்படுத்தி இருந்தது.

ஆனால் சில விசமிகள் மேற்படி அறிவித்தல் பகையையும் உடைத்தெறிந்து அங்கே தாராளமாக குப்பைகளைகொட்டுதை அவதானிக்க முடிகிறது. பொது இடத்தில் குப்பைகளை போடுவது குற்றம். ஆனால் அறிவித்தல் பலகையையும் உடைத்தெறிந்து அங்கே குப்பைளைக் கொட்டுவது என்பது அநாகரிமான விடயமாகும் எனப் பொது மக்கள் பலர் தெரிவிக்கின்றனர்.

உடைந்த அறிவித்தல் பலகையையும் கொட்டப்பட்டுள்ள குப்பையையும் படத்தில் காணலாம்.

# காஷ்மீர் மக்களுக்காக ஜெனீவாவில் ஒலித்த இலங்கை முஸ்லிம்களின் குரல்



(ஜெனீவாவில் இருந்து ஏ.ஏ.எம். அன்சிர்)

காஷ்மீர் முஸ்லிம்களின் சுயநிர்ணயத்தை அங்கீகரிப்பதுடன், அவர்களுக்கு எதிராக தொடுக்கப்படும் கொடூரங்கள் உடனடியாக நிறுத்த சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டுமென இலங்கை முஸ்லிம்களின் சார்பில் ஜெனீவாவில் வலியுறுத்தப்பட்டது.

உலக முஸ்லிம் லீக்கின் இணை ஆதரவில் ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் காஷ்மீர் மக்களின் நிலை குறித்த மாநாடு நடைபெற்றபோதே சர்வதேச யாழ்ப்பாண முஸ்லிம் அமைப்பினரும் பங்கேற்றனர். இதன் தலைவர் அனீஸ் ரவூப் இங்கு உரையாற்றுகையில்,

இலங்கை முஸ்லிம்களும் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அவர்கள் தமது பாரம்பரிய பூமியிலிருந்து இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளனர். தற்போதும் அவர்களின் அவல வாழ்வு தொடருகிறது. உலகில் எந்த மூலையில் துன்புறுத்தப்பட்டாலும் அவர்களுக்காக உரத்துக் குரல் கொடுப்பதும், அந்தக் கொடுமைகளை நிறுத்த நடவடிக்கை எடுப்பதும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்தரக் கடமையாகும்.

அந்தவகையில் காஷ்மீர் மக்கள் தமது பூரண சுதந்திரத்திற்காக நீண்டநாட்களாக போராடி வருகின்றனர். எனினும் அவர்கள் இராணுவ பலம்கொண்டு இந்திய இராணுவத்தினரால் ஒடுக்கப்படுகின்றனர்.

அவர்கள் தமது வாழ்விடங்களின் பூரண உரிமை பெற்று வாழவும் அவர்களுக்கு எதிராக இந்திய இராணுவம் மேற்கொள்ளும் அடக்குமுறைகளை நிறுத்தவும் வேண்டுமென இலங்கை முஸ்லிம்கள் சார்பில் நாங்கள் இந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் குரல் கொடுக்கிறோம் என்றார்.

இவரின் உரை முடிந்தவுடன் பார்வையாளர் அவையிலிருந்து எழுந்த நாம் தமிழர் கட்சி சார்பிலான ஒருவர், இலங்கை முஸ்லிம்கள் புலிகளினால் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டவர்கள் எனக் கூறுகிறீர்களே, அப்படியென்றால் இலங்கை இராணுவம் தமிழர்களுக்கு செய்த அநியாயங்களுக்கு உங்கள் பதில் என்ன..? தனித் தமிழீழம் பற்றி முஸ்லிம்களின் நிலைப்பாடு யாது என வினா எழுப்பினார்.

இதற்கு பதில் வழங்கிய அனீஸ், இலங்கையில் சகல சிறுபான்மை இனங்களுக்கு எதிராகவும் மேற்கொண்ட வன்முறைகள், அடாவடித்தனங்களை நாங்கள் நிராகரிக்கிறோம். எதிர்க்கிறோம். அத்துடன் ஐக்கிய இலங்கை என்பதே இலங்கை முஸ்லிம்களின் நிலைப்பாடு எனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை ஐ.நா.வின் இந்த அமர்வில் பங்கேற்ற தமிழ் ஆதரவு மற்றும் புலி ஆதரவாளர்கள் இதுபற்றிய தொடர் கேள்விகளை எழுப்ப முயன்ற போதும் காஷ்மீர் ஏற்பாட்டுக் குழுவினரால் அந்த கேள்விகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாது நேரப்பற்றாக்குறை என காரணம் கூறப்பட்டு நிகழ்வு அத்துடன் நிறைவு செய்யப்பட்டது.

மேலும் இந்த நிகழ்வில் காஷ்மீர் முஸ்லிம்களுக்கு எதிராக இந்திய இராணுவம் மேற்கொள்ளும் காட்டுமிராண்டித்தனம், பாலியல் வல்லுறவு கொடுமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல கொடூரங்கள் வீடியோ மூலம் காண்பிக்கப்பட்டதும் அவை மனதை உருக்குபவையாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# புனித மிஃராஜ் கொடியேற்றம்

அகில இலங்கை நஃஷபந்திய்யா தரீக்கின் கேந்திர நிலையமான களுத்துறை மஃழரதுன் நஃஷபந்திய்யா தக்கியாவில் வருடாந்தம் சிறப்பாக நடந்தேறி வரும். பெருமானார் முஹம்மத் முஸ்தபா ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மிஃராஜ் எனும் புனித விண்ணுலக யாத்திரை மேற்கொண்டதை நினைவு கூருமுகமாக ரஜப் பிறை 01ல் செவ்வாய் மாலை 5.00 மணியளவில் புனித மிஃராஜ் கொடியேற்றம் நடைபெறும்.

தொடர்ந்து மஃரிப் தொழுகையின் பின் 27 நாட்கள் மிஃராஜ் வரலாறு ஓதப்படுவதோடு, பிறை 13இலிருந்து (09.04.2017) ஞாயிறு பின்னேரம் திங்கள் இரவு 8.30 மணியிலிருந்து இரவு 10.00 வரை ஹதீஸ் மஜ்லிஸ் 15 நாட்கள் நடைபெறும்.

புனித மிஃராஜ் தினமாகிய 23ஆம் திகதி ஞாயிறு பின்னேரம் திங்கள் இரவு தமாம் நிகழ்வு நடைபெறும்.

2017 உலக நீர் தின தொனிப் பொருள்
"கழிவுநீர்"

# உலக நீர் தின விழா 2017











**உலக நீர் தினத்தினை முன்னிட்டு**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் வழிகாட்டலின் கீழ்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஏற்பாடு செய்துள்ள

**2017 உலக நீர் தின விழா**

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் **கௌரவ ரவூப் ஹக்கீம் அவர்களின்** தலைமையில்
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்
**வைத்திய நிபுணர் கௌரவ சுதர்சனீ பெர்னாந்துபுள்ளே அவர்களின்** பங்குபற்றலுடன்
**2017 மார்ச் மாதம் 22ம் திகதி புதன்கிழமை மு.ப. 9.00 மணிக்கு**
**கொழும்பு 07, நெலும் பொகுன திரையரங்கில் நடைபெறும்.**




**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**
**நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு**

NAVAMANI DAILY நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
22nd MARCH 2017 - WEDNESDAY

# நாச்சியாதீவில் பௌத்த தேரரும் பொலிஸ் அதிகாரியும் காட்டிய முன்மாதிரி

அநுராதபுரம் நாச்சியாதீவு முஸ்லிம் கிராமமொன்றுக்குச் சென்று இனவாத நோக்குடன் செயற்பட்டு பிரதேசத்தின் அமைதிக்கும் சிங்கள – முஸ்லிம் ஒற்றுமைக்கும் பங்கம் விளைவிக்க முற்பட்ட இளம் பௌத்த பிக்குகள் தொடர்பாக ஹிதோகம பொலிஸார் எடுத்த நடவடிக்கையால் ஒரு மோதல் ஏற்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் நீண்ட காலமாக மிக நெருக்கமாக வாழ்ந்து வருகிறார்கள். கடந்த காலங்களில் நாட்டின் ஏனைய பகுதிகளில் முஸ்லிம்கள் தொடர்பாக கசப்பான பல நிகழ்வுகள் நடைபெற்ற போதும் ஒப்பீட்டளவில் அநுராதபுரம் நகரில் கடந்த ஆட்சி காலத்தில் உயர் பொலிஸ் அதிகாரிகளின் முன்னிலையில் நீண்ட வரலாற்றினை உடைய ஸியாரம் ஒன்று அடித்து நொறுக்கப்பட்ட சம்பவம் தவிர்ந்த வேறு சம்பவங்கள் நடைபெற்றதாக இல்லை.

இந்த பின்னணியில் பாரம்பரிய முஸ்லிம் கிராமமான நாச்சியாதீவில் 200 வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த தைக்காவை புனரமைப்பதற்கு எடுத்துவரும் நடவடிக்கைக்கு முட்டுக்கட்டை போடுவதற்காக கொழும்பில் இருந்து சென்ற சில புத்த பிக்குகள் முஸ்லிம்களை தகாத வார்த்தைகளால் தூற்றி பௌத்த நாடான இலங்கையில் முஸ்லிம்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்ற தொனியில் பேசியிருக்கிறார்கள்.

இது தொடர்பாக பிரதேச முஸ்லிம்கள் பொலிஸாருக்குச் செய்த முறைப்பாட்டையடுத்து சம்பந்தப்பட்ட பிக்குகளை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று பிரதேசத்துக்கு பொறுப்பான பௌத்த பிக்குவையும், பள்ளிவாசல் தலைவரையும் அழைத்து பிரச்சினைக்கு சமரச தீர்வு காண்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். பிரதேசத்தின் பிரதம பௌத்த குருவான அத்துருவெல்ல சத்தாதிஸ்ஸ தேரர் பிரச்சினை ஏற்படுத்த முயன்ற இளம் பௌத்த பிக்குகளுக்கு புத்திமதி கூறி ஒற்றுமையாக வாழும் நம் மத்தியில் பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டாம் என கூறியுள்ளார்.

'முஸ்லிம்கள் எமது சகோதரர்கள். அவர்களை பாதுகாக்கும் கேடயமாக நாங்கள் இருப்போம். உங்களது இனவாத செயற்பாடுகளை எமது பிரதேசத்தில் மேற்கொள்வதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். எங்கிருந்தோ வந்து நீங்கள் ஒற்றுமையை சீர்குலைக்க செயற்படுகிறீர்கள்' என்று இளம் பௌத்த பிக்குமாரை சத்தாதிஸ்ஸ தேரர் எச்சரித்து அனுப்பி வைத்துள்ளார்.

பிரச்சினைகளை ஏற்படுத்திய இளம் பிக்குகள், பள்ளிவாசல் தலைவர் உட்பட முஸ்லிம்களிடம் நடந்ததற்கு மன்னிப்பு கோரி அங்கிருந்து சென்றுள்ளனர்.

நாட்டில் சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டும் பொறுப்பினையுடைய பொலிஸார் இதுபோன்ற சம்பவங்களின் போது கண்களை மூடிக்கொண்டிருந்த நிலையில் ஹிதோகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராச்சியின் இந்த முன்மாதிரியான செயற்பாடு பாராட்டுக்குரியது. அதே போன்று தான் பிரதேசத்தின் பிரதம பௌத்த தேரரான சத்தாதிஸ்ஸ தேரரின் செயற்பாடும் பாராட்டுக்குரியது. சத்தாதிஸ்ஸ தேரர் நீதியின் பக்கம் நின்றதனால் ஒரு குழப்பம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

ஹிதோகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி போன்று ஏனைய இடங்களிலும் இவ்வாறு சட்டத்தைம், ஒழுங்கையும் மீற முற்படும்போது பொலிஸார் நடந்துகொள்வதனையே நாடு எதிர்பார்க்கின்றது.

# சோவியத் – இலங்கை உறவில் திருப்புமுனையாக அமையும்



பேராசிரியர் சமன் வீரசிங்க
ரஷ்யாவிற்கான இலங்கைத் தூதுவர்

# ஜனாதிபதியின் விஜயம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரஷ்ய ஜனாதிபதி விலாடிமிர் புடினின் அழைப்பில் ரஷ்யா சென்றுள்ளார். இலங்கை - சோவியத் ரஷ்யா உறவு மற்றும் இந்த விஜயத்தின் முக்கியத்துவம் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

இலங்கைக்கும் சோவியத் ரஷ்யாவிற்குமான தொடர்பு ஏற்பட்டு 60 வருடங்கள் ஆகின்றன. இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த உறவு பிரிக்க முடியாத ஒரு உறவாகவே இருக்கின்றது.

தற்போதாகும்போது அந்த உறவு பயன்மிக்கதாகவும், வினைதிறன் மிக்கதாகவும் அமைந்திருக்கின்றது. உலகின் வல்லரசு நாடுகளில் ஒன்றான சோவியத் ரஷ்யா இலங்கைக்கு கடந்த காலங்களில் பல வகையில் உதவி வந்துள்ளது. இலங்கையின் உருக்கு, டயர் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கும் நீர்ப்பாசன திட்டங்களுக்கும் உதவியிருக்கும் சோவியத் ரஷ்யா பெருந்தொகையான உயர் கல்வி புலமைப்பரிசில்களையும் வழங்கியிருக்கின்றது. 1990ஆம் ஆண்டு பெரஸ் கொய்க்காவுடன் அவர்களுடைய அரசியல் பொருளாதார செயற்பாடுகள் மாற்றத்திற்குள்ளான போதும் இலங்கையுடனான தொடர்பில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை. சர்வதேச ரீதியாக இலங்கை எதிர்நோக்கிய பல பிரச்சினைகளில் நேரடியாக ரஷ்யா இலங்கைக்கு ஆதரவு வழங்கியதோடு ஐக்கிய நாடுகள் சபையில் அதற்காக தொடர்ந்து குரல்கொடுத்து வந்தது.

இலங்கையின் தேயிலையை கொள்வனவு செய்வதில் பிரதான நாடாக ரஷ்யா திகழ்கின்றது. இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஸ்திரத் தன்மையை பாதுகாப்பதற்கு சோவியத் யூனியன் பெரும் பங்களிப்புச் செய்தது. அதன்படி தேயிலைக்கு மேலதிகமாக கோப்பி, சிறு ஏற்றுமதி பொருட்கள், ஆபரணங்கள், மாணிக்கக் கல், மீன்பிடி உற்பத்திகள் இறக்குமதி செய்யும் முக்கிய நாடாக சோவியத் ரஷ்யா திகழ்கின்றது. அது மட்டுமன்றி இலங்கைக்கு பெருந்தொகையான ரஷ்ய உல்லாசப் பிரயாணிகள் வந்து செல்கிறார்கள். இலங்கையின் பிரதான 10 கொள்வனவு நாடுகளில் ரஷ்யாவும் அடங்குகிறது. இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 2 அல்லது 3 சதவீதமான அளவு ரஷ்யாவிடமிருந்தே கிடைக்கின்றது. இலங்கையின் தேயிலைக்கு பிரதான சந்தையாக ரஷ்யாவே திகழ்கிறது. Ceylon Tea என்ற பெயர் ரஷ்ய மக்கள் மத்தியில் மிகப் பிரபல்யமானது. இலங்கையில் இருந்து ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஏற்றுமதிகளில் 65 சதவீதமானவை தேயிலையாகவே இருக்கின்றது.

2016ஆம் ஆண்டு இலங்கை 34 மில்லியன் கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்துள்ளது. எவ்வாறானபோதும் ரஷ்யாவின் தற்போதைய தேயிலைச் சந்தை இலங்கைக்கு சாதகமானதாக இல்லை. 2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாதுகாப்பு அசாதாரண நிலைமை காரணமாக இலங்கையின் தேயிலைக்கான கேள்வி குறைந்து செல்கின்ற ஒரு ஆபத்தினை எதிர்நோக்குகிறது. இலங்கையின் தேயிலை விலையை ஒப்பிடும் போது ஓர் அலகின் விலை அதிகமாக இருப்பதே காரணமாகும். தற்போதை ரஷ்யாவில் நிகழும் பொருளாதார நிலைமைக்கு மத்தியில் சாதாரண மக்கள் உயர் தரத்தில் அல்லாத தேயிலையை நாடுகின்றனர். இதன் காரணமாக ஏனைய நாடுகள் உற்பத்தி செய்யும் தேயிலை இலங்கையின் தேயிலை ஏற்றுமதியை பாதித்துள்ளது.

தயாரிக்கப்பட்ட ஆடைகள் துருவல் தேங்காய், தும்புசார் உற்பத்திகள், கடல் சார்ந்த உணவுகள், பலசரக்குகள் என்பன இலங்கையில் இருந்து ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய பொருட்களாகும். இந்த பொருட்களுக்கு ரஷ்யாவில் நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது. கல்வித் துறையை பொறுத்தவரையில் கடந்த 60 வருட காலத்தில் ரஷ்யா வழங்கிய புலமைப்பரிசில் மூலம் சுமார் 10000 டாக்டர்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். சுகாதார துறையை பொறுத்தவரையில் அரச, தனியார் துறை பங்களிப்புடன் 500 கட்டில்களை கொண்ட வைத்திய சாலை ஒன்றை நிர்மாணிக்க கலந்துரையாடல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கடந்த யுத்த காலத்தில் சோவியத் ரஷ்யா இலங்கைக்கு அளித்த உதவிகள் மறக்க முடியாதவை.

இந்த பின்னணியிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சோவியத் நாட்டுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இது ஒரு முக்கியமான கட்டமாகும். கடந்த 12 வருட காலம் பதவியில் இருக்கும் விளாடிமிர் புடின் இலங்கை ஜனாதிபதி ஒருவரை சந்திக்கும் முதற் சந்தர்ப்பம் இதுவாகும். இந்த அழைப்பை ஜனாதிபதி புடினே விடுத்திருப்பது முக்கியமாகும். இதன் மூலம் இலங்கைக்கு பெரும் நன்மைகள் கிடைக்கும்.

# முறையற்ற நீர்வளப் பயன்பாடு இருப்புக்கு ஓர் அச்சுறுத்தலா?



மிஹிழார் எம் றசீது

### நீர் வளத்தின் தொன்மை

பிரபஞ்சத்தில் மனித வாழ்வின் தோற்றம், இருப்பு அதன் நீட்சி என்பவற்றுடன் நீர் வளம் பிரிக்க முடியாத தொடர்பைக் கொண்டுள்ளது. இஸ்லாமிய மூலாதாரங்களின் கருத்தின்படி நீர் வளம் தான் முதன்மைப் பொருளாகும். அண்ட சராசரங்களையும் பூமியையும் அல்லாஹ் படைப்பதற்கு முன்பதாகவே நீரைப் படைத்திருந்ததாக கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் பூபகமாகக் குறிப்பிடுகிறது.

அவன் எத்தகையவன் என்றால் வானங்கள் மற்றும் பூமியை ஆறு நாட்களில் படைத்தான். (அச்சமயம்) அவனுடைய "அர்ஷ்" தண்ணீரின் மீது இருந்தது. (ஹூத் : 07)

இந்த வசனம் தொடர்பில் ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களிடம் விளக்கம் கேட்டனர். அல்லாஹ் மாத்திரம் இருந்தான். அவனைத் தவிர அவனுடன் எந்தவொன்றும் இருக்கவில்லை. அவனது அர்ஷ் தண்ணீரின் மீது இருந்தது என்பதாக நபி (ஸல்) விளக்கம் அளித்தார். (புகாரி)

இந்த வசனத்தில் வரும் ஆறு நாட்கள் என்பது புவி தன்னைத் தானே சுற்றுவதால் வரும் 6 x 24 = 144 மணித்தியாலங்களைக் குறிக்காது. ஏனெனில் இக் காலப் பகுதி சூரியன், புவி உட்பட கோள்களும் பிரபஞ்சமும் படைக்கப்பட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பமாகும். பல யுகங்களாக (கோடி வருடங்களாக) பிரபஞ்சம் முழுமையாகப் படைக்கப்பட்ட பின்னர் தான், புவியையும் சூரியனையும் அளவீடாக வைத்து காலத்தை இன்றுள்ள ஆறு நாட்கள் என கணிப்பிடுவது சாத்தியமாக இருந்திருக்கும்.

எனவே தான் மேலுள்ள ஹதீஸ் உலகங்களின் (பிரபஞ்சத்தின்) தோற்றம் பற்றிக் குறிப்பிடவில்லை. மாறாக அவற்றின் தோற்றத்திற்கு முன்னரே முதற் பொருளாக நீர்வளம் இருந்துள்ளதையே சுட்டிக் காட்டுகிறது என்பதாக இமாம் தஹாவி (ரஹ்) விளக்கம் அளித்துள்ளார். (1)

### நீர் வளத்தின் முக்கியத்துவம்

மேலுள்ள அல்குர்ஆன் வசனமும் ஹதீஸும் நீரின் பூர்வீகத்தோடு, அதன் மகிமையையும் பறைசாற்றுகிறது. அல்லாஹ்வின் "அர்ஷ்" தண்ணீரின் மீது இருந்தது என்பது இதனையே உணர்த்துகிறது. மேலும் நீர் வளத்திற்கு இஸ்லாம் கொடுக்கும் அதி முக்கியத்துவத்தின் காரணமாகத் தான் அல்குர்ஆனில் அது தொடர்பில் 63 இடங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையின் அடிப்படையான விடயங்கள் அனைத்திற்குமான தெளிவான விளக்கங்களைத் தான் முதல் மூலாதாரமாகக் கொள்ளப்படும் அல்குர்ஆன் (16:88) (2) உள்ளடக்கியுள்ளது. அப்படியாயின் நீர்வளம் தொடர்பில் இஸ்லாம் எத்தனை கரிசனை காட்டுகிறது என்பது இங்கு தெளிவாகிறது.

புவி வாழ் அனைத்து ஜீவராசிகளின் தோற்றத்திற்குமான உயர் மூலமாக தண்ணீர் விளங்குவதாகவும் அல்குர்ஆன் கோடிட்டுக் காட்டுகிறது. உயிருள்ள ஒவ்வொன்றையும் தண்ணீரிலிருந்து நாம் உண்டாக்கினோம் (அல்அன்பியா : 30)

மேலும் புவி வாழ் உயிரினங்கள், தாவரங்கள் மற்றும் மனிதர்களுக்குமான வாழ்வாதாரமாக நீர் வளம் விளங்குகிறது என்பதாகவும் அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

ஆகவே, மனிதன் உணவின் பால் பார்க்கவும் (அதனை உண்டாக்கச் செய்வதற்கு) நிச்சயமாக நாமே (வானத்திலிருந்து ஏராளமான) நீரைத் தாராளமாகப் பொழியச் செய்தோம். பின்னர் பூமியை நன்கு பிளக்கச் செய்தோம். பின்னர் அதிலிருந்து தானியங்களை முளைக்கச் செய்கின்றோம். (இவ்வாறே) திராட்சை(க் கனி) களையும் ஸைதூனையம் பேரீச்சையையும் மரங்கள் அடர்ந்த தோப்புகளையும், கனியையம் புல்லை (தீவனங்களை) யும் உங்களுக்கும் உங்கள் கால்நடைகளுக்கும் பயனளிப்பதற்காக (முளைக்கச் செய்தோம்) (80:24-34)

### நீரின் அளவும் பயன்பாடும்

பூமியிலே அல்லாஹ் நீரை ஏராளமாகவும் தாராளமாகவும் பொழியச் செய்கிறான். நதிகள் நீரால் பொங்கிப் பிரவாகிக்கின்றன. ஏரிகளும் குளங்களும் நிரம்பி வழிகின்றன. சமுத்திரங்களிலிருந்து நீர் ஆவியாகி வானத்தில் பஞ்சு போன்ற மேகக் கூட்டங்களாகத் திரளாகி கருக்கட்டிய கார் முகில்களாகி மழையாக மண்ணில் பொழிகிறது. கரையில் விழுந்த நீர்த் துளிகள் பூமியைப் பசுமையாக்கி தாவரங்களை உயிர்ப்பிக்கச் செய்து நதிகளாக வழிந்தோடி கடலில் சங்கமமாகின்றன. இந்த நீராவியாக்கச் செயன்முறை சுழற்சி முறையில் தொடராக நடைபெறுகிறது.

இவ்வாறு தொடர்ச்சியாக புவிப் பந்தில் மழை பொழியும் செயற்பாடு நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் இங்கே நாம் மறந்து விடக் கூடாத ஓர் உண்மை இருக்கிறது. அதுதான் பூமிப் பந்தின் மீது நீர் எத்தனை வடிவம் எடுத்தாலும் குறித்த வரையறுத்த மாறாத அளவிலான நீர்வளமே பூவுலகில் அல்லாஹ்வால் படைக்கப்பட்டிருக்கிறது. பூவுலகில் உயிர் தோற்றத்திற்கு முன்னரே அளந்து அல்லாஹ்வால் படைக்கப்பட்ட நீர்வளமானது காலத்தின் நீட்சியாலோ மனிதன் மற்றும் உயிரினங்களின் பெருக்கத்தாலோ தாக்கம் பெறாது. குறித்த வரையறுத்த அளவிலே தொடர்ந்தும் நீர்வளம் நிலையாகவே இருக்கும். இது மாறாத விதியாகும்.

வானத்திலிருந்து அளவோடு தண்ணீரை நாம் இறக்கி வைக்கிறோம். (அதன் பின்னர்) அதனைப் பூமியில் தங்கச் செய்கிறோம் (அல்முஃமினூன் : 18)

இவ்வாறு பூமிப் பந்திற்கு வரையறுத்த அளவில் நீர் வளத்தை வழங்கியுள்ள அல்லாஹ் தனது உயிர் வாழ் படைப்புகளான மனிதன், விலங்குகள், ஜீவராசிகள் மற்றும் தாவரங்களுக்கு இடையில் அதனைப் பொதுச் சொத்தாக்கி பகிர்ந்தளித்துமுள்ளான். தேவையையும் நீதத்தையும் அடிப்படையாகக் கொண்ட இப்பகிர்வின்படி ஒவ்வொரு மனிதர்களும் அவரவர்களுக்கும், ஒவ்வொரு பிரிவும் அவற்றுக்கும் உரிய பங்கை மாத்திரமே பயன்படுத்தும் உரிமை உண்டு. உரிய பங்கிற்கு மேலதிகமாக நீர் வளத்தைப் பாவிப்பதானது பிறர் உரிமையின் மீதான அத்துமீறலாகும். இது தொடர்பிலான மனித குலத்தை நோக்கிய இஸ்லாத்தின் பகிரங்கப் பிரகடனமாகக் கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் அமைந்துள்ளது.

நீர் வளமானது அவர்களுக்கு மத்தியில் பகிரப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொருவரும் தமக்குரிய பங்கை முறைப்படி பெற்றுக் கொள்ளலாம் என நபியே நீங்கள் அவர்களுக்கு முன்பாகப் பிரகடனப்படுத்துங்கள்!. (அல்கமர் : 28)

மேற்படி வசனம் ஸாலிஹ் (அலை) அவர்களது சமூகத்திற்கும் அவர் 'முஃஜிஸத்' ஆகக் கொண்டு வந்த ஒட்டகத்திற்கும் இடையில் கிராமத்துக் கிணற்றின் நீர் பகிரப்பட்டதை நேரடியாகக் குறிக்கிறது. இருப்பினும் இறுதித் திருமறையான அல்குர்ஆனில் முழு மனித குலத்துக்குமான இறை பிரகடனமாகவே இது கூறப்பட்டுள்ளது என்பதாக இஸ்லாமிய அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே மனித குலம் தனக்குரிய அளவை விடுத்து மேலதிக மாக நீர் வளத்தைப் பயன்படுத்தினால் அது ஏனைய ஜீவராசிகளுக்கும் தாவரங்களுக்குமான பங்கைத் திருடுவதாகவும் அத்துமீறலாகவுமே கொள்ளப்படும். அவ்வாறே ஒவ்வொரு தனிமனிதர்களும், தேசங்கள் வாழ் சமூகங்களும் நீர்வளத்தில் தமக்குரிய அளவை விட மேலதிகமாகப் பயன்படுத்தினால் அதுவும் தெளிவான அத்துமீறலாகும்.

நீர்வளமானது அனைவருக்குமான பொதுச் சொத்து என்ற கருத்தை ஹதீஸும் வலியுறுத்தியுள்ளது. மக்கள் மூன்று அம்சங்களில் பொதுப் பங்காளர்கள் ஆவர். நீர்வளம், மேய்ச்சல் தரை, நெருப்பு என்பனவே அவையாகும்.

இந்த ஹதீஸில் நீர் வளம் முதன்மைப்படுத்திக் கூறப்பட்டிருப்பது நோக்கத்தக்கதாகும். இவ்வாறாக இஸ்லாம் தான் முதன் முதலாக நீர்வளத்தைப் பொது சொத்தாகப் பிரகடனப்படுத்தியது. இந்தப் பிரகடனம் தான் குடிப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் மாத்திரம் என்ற வரையறையைத் தாண்டி, நவீன விஞ்ஞான சமூகத்தின் பல்வேறுபட்ட தொழில்நுட்ப, இரசாயனத்துறை, பௌதீகவியல் துறை அம்சங்களில் நீரின் பயன்பாடு விரிந்து செல்லக் காரணமாக அமைந்தது.

(தொடர் 11ஆம் பக்கம்)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குக

## ஐ.தே.க. ஜனாதிபதிக்கு அழுத்தம்

(மொஹமட் உவைஸ்)

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை தொடர்ந்தும் தக்க வைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில்,அதை இல்லாதொழிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய தேசிய கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருவதாக ஐ.தே .க எம்.பி ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், மஹிந்தவின் ஆட்சியை கவிழ்ப்பதற்காக நாம் பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினோம். அதில் முக்கிய வாக்குறுதியாக அமைந்தது புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதுமாகும்.

எல்லாத் தேர்தல்களிலும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்று வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. வாக்குறுதி வழங்கியவர்கள் எவரும் அதை நிறைவேற்றவில்லை. அதேபோல் நாமும் வாக்குறுதி வழங்கினோம். அதற்கு ஏற்ப செயற்படவும் செய்தோம்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியின் சில முக்கிய அதிகாரங்களை நாம் முதல் கட்டமாக குறைத்து அவற்றை பாராளுமன்றத்திற்கு வழங்கினோம். அடுத்ததாக அந்த அதிகாரத்தை முழுமையாக இல்லாது செய்வதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ளோம்.

அடுத்த வாக்குறுதி புதிய அரசமைப்பு. அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையும் இடம்பெறுகின்றது. ஆனால், இந்த இரண்டு விடயங்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் சிலர் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்படக்கூடாது என்றும் புதிய அரசமைப்பு தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படக்கூடாது என்றும் அவர்கள் கூறி வருகின்றனர். நாம் இந்த நிலைப்பாட்டை எதிர்க்கின்றோம். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும். புதிய அரசமைப்பு மீதான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் ஐக்கிய தேசிய கட்சி இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளது என தெரிவித்தார்.

# வடக்கை அச்சுறுத்தும் பன்றிக்காய்ச்சல்

## கர்ப்பிணிகள், சிறார்கள் உட்பட 60பேர் பாதிப்பு

(அ.அருண் பிரசாந்த் )

வடக்கில் 60 பேர் பன்றிக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதில் 10 சிறுவர்கள் அடங்குகின்றனர் என்றும் ஈ.பி.டி.பியின் தலைவரான டக்ளஸ் தேவானந்தா நேற்று சபையில் தெரிவித்தார்.

இவ்வாறு பன்றிக்காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் பரவுகின்றமைக்கு முறையாக கழிவகற்றல் இடம் பெறாதமையே காரணமாக உள்ளது. எனவே, உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலை உடனடியாக நடத்தி, இதனூடாக அரசு இந்நோய்கள் பரவுதலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதுவிடயம் தொடர்பில் பாராளுமன்றில் நேற்றைய தினம் உரையாற்றிய டக்ளஸ் எம்.பி.,

நாடளாவிய ரீதியில் தற்போது டெங்குநோயின் பரவலானது மிகவும் அதிகரித்துவருகின்றது. அந்தவகையில் கிண்ணியா பிரதேசமானது இதனால் மிகவும் பாரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

கிண்ணியா, திருகோணமலை என கிழக்கில் மட்டுமன்றி வடக்கிலும் டெங்கு நோயின் தாக்கம் தற்போது அதிகரித்து வருகின்றது. வடக்கு வைத்தியசாலைகளுக்கு வருகைதரும் 90 வீதமான நோயாளர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

அத்தோடு, பன்றிக்காய்ச்சல் நோயும் அங்கு வேகமாக பரவிவருகின்றது. இதனால் வவுனியாவில் மட்டும் 22 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, கடந்த 2 ஆம் திகதி கெப்பட்டிக்கொல்லாவ பிரதேசத்தில் குழந்தை பிரசவித்து இரண்டு வாரங்களேயான தாயொருவரும் பலியாகினார்.

கிளிநொச்சியில் மட்டும் கடந்த 10 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை பன்றிக்காய்ச்சலினால் 10 கர்ப்பிணிப் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோல வடக்கில் மட்டும் இதுவரை இந்நோயினால் 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 10 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

மேலும், வடக்கு வைத்தியசாலைகளுக்கு தினமும் 1000 நோயாளர்களேனும் சுவாசப் பாதிப்பினால் வருகை தருகிறார்கள் என்று தெரியவந்துள்ளது. இந்த நோயினால் மட்டும் 20 ஆயிரம் பேர் வடக்கில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு முறையான விதத்தில் கழிவகற்றல் மேற்கொள்ளப்படாதமையே காரணமாக அமைந்துள்ளமையால், உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலை உடனடியாக நடத்தி, இந்நோய் பரவலை அரசு முறையாக தடுக்க வேண்டும் என்றார்.

# முஸ்லிம் மாணவிக்கு கடன் வழங்கிய மோடி

(திருச்சி சாஹுல் ஹமீது)

முஸ்லிம் மாணவி சாராவுக்கு கல்வி கடன் உடனடியாக வழங்க பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.

பிரதமர் மோடி, மாணவி சாராவுக்கு கல்வி கடன் கிடைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தார். விஜயா வங்கி மூலம் அந்த மாணவிக்கு உடனே ரூ.1.5 லட்சம் கொடுக்க உத்தரவிட்டார்.

கர்நாடகா மாநிலம் மாண்டியா மாவட்டத்தில் உள்ள சுகர் டவுனில் வசித்து வருபவர் அப்துல் இலியாஸ். இவரது மகள் சாரா. இவர் கர்நாடகாவில் உள்ள பி.இ.எஸ். கல்லூரியில் எம்.பி.ஏ. படித்து வருகிறார்.

முதலாண்டு படிப்பை நிறைவு செய்துள்ள அவர் இரண்டாமாண்டு படிப்பைத் தொடர பணம் இல்லாமல் கஷ்டப்பட்டார். வங்கிகளுக்கு சென்று கல்விக் கடன் கேட்டார். ஆனால் கடன் கொடுப்பது பற்றி அதிகாரிகள் உறுதியான பதிலை சொல்லாமல் காலம் தாழ்த்தி வந்தனர்.

இதைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடிக்கும் மாணவி சாரா கடிதம் எழுதினார். அந்த கடிதத்தில் அவர், தனது குடும்பத்தின் ஏழ்மை சூழலை விளக்கி இருந்தார். மேலும் தனக்கு கல்வி கடன் கிடைக்க உதவி செய்யும்படி கோரிக்கை விடுத்திருந்தார்.

பிரதமர் அலுவலக அதிகாரிகள் இந்த கடிதம் பற்றிய தகவலை மோடி கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

உடனே பிரதமர் மோடி, மாணவி சாராவுக்கு கல்வி கடன் கிடைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தார்.

# தேசிய விருது விழா 2017





தாய்நாட்டுக்காக உன்னதமான பணியில் ஈடுபட்ட, உன்னதமான இலங்கையர்களுக்கு தேசிய விருது வழங்கப்படும் 'தேசிய விருது விழா 2017' ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

12 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறும் இந்த தேசிய விருது வழங்கும் விழாவில் இலங்கைக்காக சிறப்பாக சேவையாற்றியுள்ள 89 இலங்கை பிரஜைகளுக்கு ஜனாதிபதியால் விருதுகள் வழங்கப்பட்டன.

இலங்கையருக்கு வழங்கப்படும் அதியுயர் விருதான ஸ்ரீலங்காபிமான்ய விருது காலஞ்சென்ற பண்டித் டபிள்யு.டீ. அமரதேவவுக்கு வழங்கப்பட்டது.

விசேடமாக இலங்கைக்கும், பொதுவாக மனிதகுலத்துக்கும் ஆற்றிய உன்னத மற்றும் சிறப்பான சேவைக்காக இலங்கையர்கள் அல்லாத நபர்களுக்கு வழங்கப்படும் தேசிய விருதான ஸ்ரீ லங்கா ரஞ்சன விருது, கலாநிதி சரத் டி குணபால, சித்தார்த்த காவுல் ஆகியோருக்கு ஜனாதிபதி வழங்கப்பட்டது.

நாட்டிற்காக ஆற்றிய அதி உன்னதமான, பாராட்டத்தக்க சேவைக்கு உபகாரமாக 10 தேசமான்ய விருதுகள் வழங்கப்பட்டன. அப்பாஸ் அலி அக்பர் அலி, பேராசிரியர் கொல்வின் குணரத்ன, கலாநிதி தேவநேசன் நேசைய்யா, நந்ததாச ராஜபக்ஷ, பேராசிரியர் கே.எம். த சில்வா, லதா வல்பொல அம்மையார், மினேக்க பிரசந்த விக்கிரமசிங்க, பேராசிரியர் ப்ரியாணி சொய்ஸா, அமரதாச குணவர்தன, திஸ்ஸ தேவேந்ர ஆகியோரே ஜனாதிபதியிடமிருந்து விருதினை பெற்றுக்கொண்டனர்.

தேவநாயகம் ஈஸ்வரன், மருத்துவ கலாநிதி லக்ஷ்மன் வீரசேன, லெஸ்லி ஷெல்டன் தேவேந்ர, கெப்டன் எம்.ஜி. குலரத்ன, சுசந்திகா ஜயசிங்க, ரஞ்சன் மடுகல்ல, ஷான் விக்ரமசிங்க, கலாநிதி பப்லிஸ் சில்வா, டப்ளியு.கே. எச்.வெகபிட்டிய ஆகிய 09 பேர் ஜனாதிபதியால் அவர்களிடமிருந்து தேசபந்து விருதினைப் பெற்றுக் கொண்டனர்.

பேராசிரியர் நிமல் சேனாநாயக, கலாநிதி பந்துல விஜயரத்ன, மருத்துவ கலாநிதி கொல்வின் சமரசிங்க, பேராசிரியர் ஹரேந்ர த சில்வா, பேராசிரியர் த சில்வா டி.கே.நிமல் பத்மசேன, தகைசார் பேராசிரியர் எரல் றட்கிளிப் ஜான்ஸ், பேராசிரியர் லால் சந்ரசேன, தகைசார் பேராசிரியர் எம்.டப்ளியு.ஜே.ஜி. மென்டிஸ், பேராசிரியர் எம்.எம். ஆர். வாஸ் ஜயசேகர, பேராசிரியர் சரத் கொடகம, பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகிய 11 பேர் ஜனாதிபதியிடமிருந்து வித்தியாஜோதி விருதினை பெற்றுக் கொண்டனர்.

இதற்கு மேலதிகமாக 22 கலாகீர்த்தி விருதுகளும், 07 ஸ்ரீலங்கா சிகாமணி விருதுகளும், 10 வித்தியாநிதி விருதுகளும், 13 கலாசூரி விருதுகளும், 02 ஸ்ரீலங்கா திலக விருதுகளும், 02 வீரபிரதாப விருதுகளும் வழங்கப்பட்டன.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், புத்திஜீவிகள், கலைஞர்கள் உள்ளிட்ட பிரமுகர்களும் விருது விழாவில் கலந்து கொண்டனர்.

# விஸ்டம் சர்வதேச பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று

(பேருவளை நிருபர்)

தர்காநகர் விஸ்டம் சர்வதேச பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி இன்று 22ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.00 மணிவரை தர்காநகர் பாக்கிர் மாக்கார் விளையாட்டரங்கில் நடைபெறும்.

அதிபர் எம்.என்.எம். மதனி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

பாடசாலை பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம். பௌஸர் (நளீமி) ஓய்வுபெற்ற அதிபர் ஹாபிஸ் இஸ்ஸதீன் உட்பட பலரும் நிகழ்வில் பங்குபற்றுவர்.

# உலக நீர் தின தேசிய வைபவம் தாமரைத் தடாகத்தில் இன்று

(பேருவளை.பீ.எம்.முக்தார்)

உலக நீர் தினம் இன்று(22) அனுஷ்டிக்கப்படவுள்ளதோடு, கழிவு நீர் என்பதே இவ்வருடத்தின் தொனிப்பொருளாகும்.

1993 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை உலக நீர் தினத்தைப் பிரகடணப்படுத்திய பின் ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் 22 ஆம் திகதி உலகம் பூராகவும் நீர் தினம் விமர்சையாக கொண்டாடப்படுகின்றது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஏற்பாடு செய்துள்ள உலக நீர் தின பிரதான வைபவம் இன்று கொழும்பு 7 இல் உள்ள தாமரைத்தடாக அரங்கில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

பேராசிரியர் குஸநிமா கருணாரத்ன விழாவில் விசேட பேச்சாளராக பங்குபற்றுவார்.

இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்ணாந்துபுள்ளே, அமைச்சின் செயலாளர் சரத் சந்திரசிறி விதான, சபையின் தலைவர் கே.ஏ.அன்ஸார், உப தலைவர் சபீக் ரஜாப்தீன், நிறைவேற்றுப் பணிப்பாளர் மஹிலால் சில்வா உட்பட சபை உயரதிகாரிகள் பலரும் பங்குபற்றுவர்.

நீர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நாடு தழுவிய ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரை, குழுப் பாடல், சுவரொட்டி போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு, சபையின் 25 வருடங்கள் சேவையை பூர்த்தி செய்த ஊழியர்கள் கௌரவிப்பு, க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற சபை ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பரிசு வழங்கல், சிறந்த காரியால தெரிவுப் போட்டியில் வெற்றிபெற்ற காரியாலயத்திற்கு பரிசளித்தல் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறும். சபையின் கலைச்சங்கம் ஏற்பாட்டிலான கலை, கலாசார நிகழச்சிகளும் நடைபெறும்.


## மாந்தை சோல்ட் லிமிற்டெற்

Mantai Salt MS

### பதவி வெற்றிடங்கள்

மாந்தை சோல்ட் லிமிற்றெற் ஆனது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழுள்ள அரசாங்க உரிமையுள்ள கம்பனியொன்றாகும்.

ஆனையிறவு - கிளிநொச்சியிலுள்ள எமது உப்பளத்தில் நிரந்தர அடிப்படையில் பணியாற்றுவதற்காக பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### உதவி முகாமையாளர் - நிதி (JM 1-1) - 01 பதவி வெற்றிடம்

**தேவைப்படுத்தப்படும் தகைமைகள்**

**வெளியக அபேட்சகர்:**
ICASL/ CIMA/ ACCA இடைநிலை சான்றிதழ் அல்லது முகாமைத்துவம் / வர்த்தகம் ஆகியவற்றில் பட்டம் மற்றும் ஒரு வருட பட்டப்பின் தகைமைப் பட்ட அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்:**
1. மேலே குறிப்பிட்டவாறு வெளியக அபேட்சகர்களுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.

அல்லது

2. பதவி தொடர்பாக விடயப் பரப்பில் IIஆம் தரத்தில் 'முகாமைத்துவ உதவியாளர், தொழில்நுட்பவியல் சாராத' பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவுத் திட்டம்:**
JM 1-1 29,355/= சீராக்கல் படியாக 5275-/= ரூபாவும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும். 2017ஆம் ஆண்டிற்கான வேதன ஏற்றம் 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படும்.

**வயது:**
22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**ஏனையவை:**
i. இலங்கை பிரஜையொருவராக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக உடல் உள ரீதியில் ஆரோக்கியமாக இருப்பதுடன் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.
iii. தனிச்சிறப்பான குணாதிசயங்களையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாக அமைந்திருக்கும்.**

2017 மார்ச் 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் உங்கள் சுயதரவு மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை, **'தலைவர், மாந்தை சோல்ட் லிமிற்றெற் இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-5'** என்ற முகவரிக்கு தயவு செய்து அனுப்பவும். உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிக்கான தலையங்கம் குறிப்பிடப்படல் வேண்டும்.



## கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
## கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்
## கேள்விமனு கோரல்

### கொள்முதல் அழைப்பிதழ்

**செயல்பாட்டு குத்தகை முறையின் கீழ் வாகனங்களை வழங்கல்**

**01-Passenger van (Maximum 3000 cc) 01-SUV Jeep (Maximum 2500 cc)**

### கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

தமது வாகன தொகுதியில் 10 வாகனமேனும் உள்ள வாகன முகவர்கள் / விற்பனையாளர்கள், வாகனங்களை வாடகைக்கு கொடுக்கும் கம்பனிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து புதிய அல்லது 1000 கிலோ மீற்றர்களுக்கு குறைவாக ஓடியுள்ள வாகனங்களை, செயல்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கொள்முதல் குழு தலைவர், முத்திரையிடப்பட்ட கேள்விமனு கோருகிறார்.

மீளளிக்கப்படாத ரூ. 1500 செலுத்துவதன் மூலமும், கம்பனிகள் பதிவாளர் நாயகம் / பிரதான கணக்காளருக்கு எழுத்து மூலமாக கோரிக்கை முன்வைப்பதன் மூலமும், 2017 மார்ச் 23 முதல் 2017 ஏப்ரல் 06 ஆம் திகதி வரையிலும், முற்பகல் 09.30 மணி முதல் பிற்பகல் 03 மணி வரையிலும், எந்தவொரு வேலை நாட்களிலும், பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடிவது, கேள்விமனு ஆவணங்களை பயன்படுத்துவதன் மூலமாகும். கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் காசாளர் பிரிவில் பணம் காசாக செலுத்தப்பட வேண்டும். கேள்விமனுக்கள் 2017 ஏப்ரல் 06 ஆம் திகதி பிற்பகல் 02 மணிக்கு கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 04 ஆம் மாடியில் பிரதான காசாளரின் அறையில் உள்ள கேள்விமனு பெட்டியில் இடப்பட வேண்டும். இந்த நேரம் தாண்டியதுமே, அங்கு வந்திருக்கும் மனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில், 05 ஆம் மாடியில் கம்பனிகள் பதிவாளர் கூட்ட அறையில் கேள்விமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**கொள்முதல் குழு திணைக்களம்**
**கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,**
**'சமாகம் மெதுர',**
**இல 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10.**
**தொலைபேசி: 011 2689212, 01 12689205**

## சமையல்...! சமையல்...!



## அரிசி பணியாரம்

**தேவையான பொருட்கள்:**

* அரிசி - 250 கிராம்
* உளுந்து - 50 கிராம்
* நெய் - 50 மி.லி.
* நறுக்கிய முந்திரி - 30 கிராம்
* வெங்காயம் - 1
* பச்சைமிளகாய் - 1
* கரட் - 1
* நறுக்கிய தேங்காய் - 1 கப்
* காய்ந்தமிளகாய் - 2
* கறிவேப்பிலை - சிறிது.
* உப்பு - தேவையா அளவு

**செய்முறை**

அரிசி, உளுந்து இரண்டையும் 8 மணி நேரத்திற்கு ஊறவைத்து தோசை மா பதத்திற்கு அரைக்கவும். பின் 2 மணி நேரத்திற்கு அப்படியே வைக்கவும். அகண்ட பாத்திரத்தில் எண்ணெயை காயவைத்து கடுகு, காய்ந்தமிளகாய், பச்சைமிளகாய், வெங்காயம், கரட், தேங்காய், கருவேப்பிலை, நறுக்கிய முந்திரி, உப்பு சேர்த்து வதக்கி மாவுடன் கலக்கவும். பின்பு பாத்திரத்தில் மாவை ஊற்றி பணியாரத்தை நெய் விட்டு சுட்டெடுத்து பரிமாறவும்.

## அன்புடன் கண்மணி

பா.மலரம்பிகை

## கர்ப்பிணிகளே உங்களுக்காக...



கர்ப்பம் என்பதை வைத்தியர் உறுதிப்படுத்திய பின்னர், ஒவ்வொரு மாதமும் மிகவும் கவனமாக செயற்பட வேண்டும்.

அன்றாடம் குறைந்த அளவு உணவுகளை சிலமணி நேர இடைவெளி விட்டு அடிக்கடி சாப்பிடவும். 4 மணி நேரத்திற்கு அதிகமான இடைவெளி இருத்தல் கூடாது.

ஒவ்வொரு முறை படுக்கையிலிருந்து எழும்போதும் கவனமாக பொறுமையுடன் எழுந்திருத்தல் வேண்டும்.

ஒரே நேரத்தில் அதிக அளவிலான சாப்பாட்டை எடுத்துக் கொள்வதைத் தவிர்க்கவும்.

நீங்கள் ஓய்வு வேண்டும் என்று நினைக்கும் போதெல்லாம் போதிய அளவு ஓய்வை எடுத்துக் கொள்ளுங்கள்.

சாப்பிடும் உணவை நுகர்ந்தபின் சாப்பிடுவதை தவிர்க்கவும். அது உங்களுக்கு உணவின் மீது அதிருப்தியை ஏற்படுத்தலாம்.

இடுப்பை இறுக்காதவகையிலான தொழதொழப்பான (லூஸ்) ஆடைகளை அணிந்து கொள்ளப்பழகுங்கள்.

கோப்பி அருந்துவதையும் தவிர்த்தல் நல்லது. அதற்கு பதிலாக பால் அல்லது மூலிகை கலந்த தேநீர் அருந்தலாம்.

பயணத்தின் போது நீண்டநேரம் உட்கார்ந்திருப்பதைத் தவிருங்கள். குறைந்தது ஒருமணி நேரத்திற்கு ஒருமுறையோ அல்லது இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறையோ நடந்து உலாவுங்கள்.

## இளநீரும், தேனும் நன்மையே...





ஒவ்வொரு நாளும் ஒரு டம்ளர் இளநீரில் 1 மேசைக்கரண்டி தேன் கலந்து, தினமும் காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் குடிப்பதால் பல நன்மைகள் கிடைக்கும்.

உடலினுள் உள்ள அழற்சி குறைவதோடு, தொற்றுக்கிருமிகளும் அழிக்கப்படும்.

இந்த இயற்கை பானத்தை வெறும் வயிற்றில் குடிப்பதால், சிறுநீரகங்களில் கழிவுப் பொருட்கள் வெளியேற்றப்பட்டு, சிறுநீரகங்கள் ஆரோக்கியமாகவும், சுத்தமாகவும் இருக்கும்.

குடலியக்கத்தின் செயற்பாடு மேம்பட்டு, மலச்சிக்கல் பிரச்சினையில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும்.

ஏராளமான விட்டமின்களும், கனிமச் சத்துக்களும், உடலினுள் உள்ள செல்களுக்கு ஊட்டமளித்து, உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தை வலிமையாகவும், ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ளும்.

இந்த இயற்கை பானம் இரத்தத்தில் உள்ள அதிகப்படியான கொலஸ்ட்ரால் அளவைக் குறைத்து, இரத்தக் குழாய்களில் அடைப்புக்கள் ஏற்படுவதைத் தடுத்து, இதய நோய்களின் அபாயத்தைக் குறைக்கும்.

இளநீரில் தேன் கலந்து குடிப்பதால், குடலியக்கம் சீராகும் மற்றும் வயிற்றில் உற்பத்தி செய்யப்படும் அதிகப்படியான அமில சுரப்பு குறையும்.

## மகிழ்ச்சியின் இரகசியம்



எல்லோருக்கும், எப்போதும், மகிழ்ச்சியாக இருக்கத்தான் விருப்பம். சில எளிய விஷயங்களைப் பின்பற்றினாலே போதும், மகிழ்ச்சியும் நிம்மதியும் மனதில் குடிகொள்ளும்.

மனஅழுத்தத்தைப் போக்குவதற்கான அமைப்பு, நமக்குள்ளேயே உள்ளது. அது, நம் மனமும் நுரையீரலும்தான். மூச்சை ஆழ உள்ளிழுத்து, நிதானமாக வெளியேற்றி மூச்சுப் பயிற்சி செய்யுங்கள். அமைதியாக அமர்ந்து உங்கள் சுற்றுப் புறத்தைக் கவனியுங்கள்.

நடைப்பயிற்சியாக இருந்தாலும்கூட மனநலத்துக்கு மிகுந்த நன்மை அளிக்கிறது. ஆனால் வீட்டுக்குள்ளாக நடைப்பயிற்சி எந்திரத்தில் நடப்பதை விட திறந்தவெளியில் காலாற நடப்பது நல்லது.

மனதில் அழுத்திக்கொண்டிருக்கும் எதிர்மறை எண்ணங்களை இறக்கிவைப்பது, அதாவது டைரி எழுதுவது போன்ற எழுத்தில் வடிப்பது உங்களுக்கு ஆறுதல் அளிக்கும்

மனம் படபடப்பாகவும், அமைதியின்றியும் இருக்கும்போது உங்களுக்குப் பிடித்த இசை, பாடலை ஒலிக்கவிடலாம். அது மூளையையும் இதயத்தையும் எட்டி உங்களை அமைதிப்படுத்தும்.

எப்போதும் சோகத்திலும் விரக்தியிலும் புலம்பிக்கொண்டிருப்பவர்களுடன் இருந்தால் நம்மையும் அந்த வியாதி தொற்றிக்கொள்ளும்.

எனவே, எப்போதும் உற்சாகமாக, மகிழ்ச்சியாக இருக்கும் மனிதர்களுடன் பழகுங்கள்.

அடிக்கடி வெளியிடங்களுக்குச் சென்றுவருபவர்களும், சுற்றுலாவில் நாட்டமுள்ளவர்களும் அதிக மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். புதிய இடம், புதிய நபர்கள் எப்போதுமே ஓர் உற்சாகம் தருவார்கள்.

நீங்கள் வழக்கமாக படுக்கைக்குச் செல்வதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பாகச் செல்லுங்கள். தூங்கும் நேரத்தைக் குறைப்பது, உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கும்.

நமது உணர்வுகள், கவலைகளை நமது நம்பிக்கைக்கு உரியவரிடம் மனந் திறந்து பேசுவது நன்மை தரும். மனநல ஆலோசகர்களிடமும் பேசலாம். இவ்வாறானவற்றை கடைப்பிடித்து வந்தாலே மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

## நரை முடிக்கு கோப்பி



காபி மிகவும் இயற்கையானது மற்றும் முற்றிலும் பாதுகாப்பான ஒன்று. இது முடியின் வளர்ச்சியைத் தூண்டக்கூடியது.

நல்ல இயற்கையான கோப்பிக் கொட்டையைத் தேர்வு செய்வது மிகவும் அவசியம். கோப்பி விதையை பொடி செய்து தலைக்கு குளித்தால் நல்லது.

இவ்வாறு செய்தால் முடியின் வளர்ச்சி அதிகமாகும். மற்றும் முடிக்கு இயற்கையான அழகையும் கொடுக்கும். அது மட்டுமின்றி முடிக்கு இயற்கையாக சொக்லேட் நிறத்தைக் கொடுக்கும். இதற்கு பிறகு கோப்பியை வைத்து முடியை அலசுவதால் முடி வலிமையாகவும்,முடியின் நிறத்தை தொடர்ந்து பராமரிக்கவும் செய்யலாம்.

---

## சாய்ந்தமருது ஓய்வூதியர் சங்கத்தின் தலைவராக அப்துல் ஜப்பார் ஏழாவது தடவையாக தெரிவு





(அஸ்லம் எஸ்.மௌலானா)

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் சாய்ந்தமருது பிரதேச கிளைச் சங்கத்தின் தலைவராக முன்னாள் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.அப்துல் ஜப்பார் ஏழாவது தடவையாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

இதன்போது சங்கத்தின் உப தலைவராக டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல், செயலாளராக ஏ.எல்.மீராலெப்பை, பொருளாளராக எம்.ஜமால்தீன், செயற்குழு உறுப்பினர்களாக யூ.எல்.ஏ.அஸீஸ், ஏ.ஆர்.எம்.பாரூக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த வருடாந்த பொதுக் கூட்டத்தில் சட்டம், ஒழுங்கு, தெற்கு அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஐ.எம்.ஹனிபா, கணக்காளர் ஏ.எல்.எம்.நஜிமுதீன், ஓய்வூதிய விடயத்திற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.முஜீபா, அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் அம்பாறை மாவட்டக் கிளைத் தலைவர் எம்.செல்லத்துரை ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் ஓர் அங்கமாக மரணமடைந்த ஓய்வூதியர்களுக்காக ஐ.எல்.அஹமட்லெப்பை மௌலவியினால் விசேட துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் ஓய்வூதியர்களுக்கான நலன்கள் குறித்த கோரிக்கைகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.



அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் சாய்ந்தமருது பிரதேச கிளையின் வருடாந்த மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை(19) சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் எம்.ஐ.அப்துல் ஜப்பார் தலைமையில் நடைபெற்றபோது சட்டம், ஒழுங்கு, தெற்கு அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம்.சலீம் பாராட்டி கௌரவிக்கப்படுவதையும் பிரதேச செயலாளர் எம்.எம்.ஹனிபா, நம்பிக்கை நிதியத்தின் சாய்ந்தமருது பிரதேச கிளையின் உப தலைவர் டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல், செயலாளர் எம்.மீராலெப்பை, அம்பாறை மாவட்டக் கிளைத் தலைவர் எம்.செல்லத்துரை உள்ளிட்டோரையும் படத்தில் காணலாம். (படம் - அஸ்லம் எஸ்.மௌலாணா)

## இலங்கை பெண் சாரணியம்
### வண்ணத்துப் பூச்சி சின்னம் சூட்டும் நிகழ்வு





(மருதமுனை நிருபர்)

மருதமுனை அல்-மதீனா வித்தியாலய மாணவிகளுக்கான இலங்கை பெண் சாரணியம் வண்ணத்துப் பூச்சி சின்னம் சூட்டி சான்றிதழ் வழங்கிய நிகழ்வு சனிக்கிழமை(18-03-2017)அதிபர் ஏ.ஆர்.நிஃமத்துல்லா தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இதில் கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர். திருமதி ஜிஹானா ஆலிப்,கிழக்கு மாகாண பெண் சாரணிய ஆணையாளர் திருமதி ரோஹினி மனோகரன், உதவி ஆணையாளர் செல்வி த.பாரிசாத மலர், ஆசிரிய ஆலோசகர் திருமதி ரி.கே.பத்திரன. ஆசிரியை திருமதி பரியா காசீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு 37 மாணவிகளுக்கு சின்னம் சூட்டி சான்றிதழ் வழங்கப்பட்டது.

## ஹரியாலையில் 4000 ஏக்கர் நெற்காணி வரட்சியால் நாசம்
### பல மாதங்கள் கழிந்தும் நஷ்டஈடு இல்லை

ஹரியால தேர்தற் தொகுதியில் பதலகொட நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீரைப் பெற்று வேளாண்மை செய்யப்பட்ட 4000 ஏக்கர் நெற்காணிகள் நிலவும் வரட்சி காரணமாக முற்றாக அழிந்து நாசமாகியுள்ளன.

இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக வாக்குறுயளித்து இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததது குறித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

தித்தவல்கால, உயன்வல உட்பட்ட பல கிராமங்களில் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தித்தவல்கால சிறுவிவசாயிகள் சங்கத் தலைவர் எம்.எச்.எம். பாரூக் தெரிவித்தார்.

நஷ்டஈடு வழங்குவதாக பிரதேசத்தில் பிரதேச செயலாளர் வாக்குறுதியளித்து பல வாரங்கள் கழிந்தும் நஷ்டஈடு கிடைக்கவில்லை என்றும் பாரூக் தெரிவித்தார்.

## சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்டு குளத்தில் குதித்த நபர் சடலமாக மீட்பு

**(எறாவூர் நிருபர்-ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

மட்டக்களப்பு பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வு விவகாரத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டிய மாவளையாறு கிராமத்தைச் சேர்ந்த 48வயதுடைய சுப்பிரமணியம் இளவரசன் என்பவரே உயிரிழந்தவராவார்.

மட்டக்களப்பு - கித்துள் கிராமசேவகர் பிரிவிலுள்ள கல்வாடித்துறை ஆற்றுப்பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முந்தானையாற்றின் கல்வாடித்துறைப் பகுதியில் செவ்வாய்க்கிழமை சட்டவிரோதமாக ஆற்றுமண் ஏற்றுவதற்காக மூன்று உழவு இயந்திரத்தில் சென்ற நபர்களை விசேட அதிரடிப்படையினர் தடுத்து கைதுசெய்ய முற்பட்டுள்ளனர்.

இதில் மூன்று சாரதிகள் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டனர். எனினும் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச் சென்றவரை தேடும் பணியில் ஈடுபட்டபோது அவர் ஆற்றுப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கரடியனாறு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

■ நேர்காணல்: ஆதில் அலி சப்ரி

மக்களுக்கு வெறுமனே வீடொன்றை வழங்குவதல்ல எமது நோக்கம். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்திலேயே செயற்பட்டு வருகின்றோம். தொழில், கல்வி, விளையாட்டு, கலை போன்ற அனைத்திலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம்.



# கொழும்பிலிருந்து பூர்வீகக்குடிகள் வெளியேற்றப்பட மாட்டார்கள்

கொழும்பிலிருந்து பூர்வீகக்குடிகள் வெளியேற்றப்பட மாட்டார்கள் என்று மேற்கு அபிவிருத்தி மாநகர அமைச்சர் பாட்டலி சம்பிக ரணவக தெரிவித்தார். அவர் நவமணிக்கு அளித்த முழுமையான நேர்காணலை இங்கு தருகின்றோம்.

**கேள்வி:** மேற்கு அபிவிருத்தி மாநகர அமைச்சின் வேலைத் திட்டங்கள் கொழும்பை மாத்திரம் மையமாக கொண்டதா?

**பதில்:** கொழும்பு, கொழும்பைச் சூழ மாத்திரமன்றி, இலங்கை முழுவதுமாக பல நகர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தி வருகின்றோம். மேல் மாகாண திட்டமிடல்களை 2016ஆம் ஆண்டு இறுதியில் முடித்து, கட்டம் கட்டமாக செயற்படுத்த ஆரம்பித்துள்ளோம். அதற்கு மேலதிகமாக, அநுராதபுரம், கண்டி, காலி,



யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களை இனங்கண்டு அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகலை, இரத்தினபுரி, மாத்தறை ஆகிய பிரதேசங்களின் அபிவிருத்தி திட்டங்கள் குறித்த திட்டமிடல்களையும் மேற்கொண்டு வருகின்றோம். பொளன்னறுவைக்கென்று விஷேட திட்டமிடலொன்றும், ஏனைய அனைத்து நகரங்களுக்கு திட்டமிடல்களை ஆரம்பித்துள்ளோம்.

மெகாபொலிஸ் திட்டத்தால் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் போர்ட் சிட்டி திட்டத்தை பொறுப்பேற்றோம். அடுத்த வருடம் ஜூலை மாதமாகும்போது அதன் முதல் தொகுதி நிலங்களை விற்பனைசெய்யவுள்ளோம். 2019 இறுதியாகும்போது போர்ட் சிட்டியின் பெரும்பாலான வேலைகளை நிறைவுசெய்யவுள்ளோம். முதலாவதாக 6 தொழிநுட்ப நகரங்கள் நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளதோடு, அவற்றை 16 வரை அதிகரிக்கவும் எதிர்பார்க்கின்றோம். கொழும்பில் பேரை குளத்தைச் சூழவுள்ளவர்கள் அகற்றப்பட்டு அழகுபடுத்தப்படவுள்ளன. விமான நிலையத்தையும் துறைமுகத்தையும் இணைக்கும் மூலோபாய நகரங்கள் குறித்தும் சிந்தித்து வருகின்றோம்.

கொழும்பில் குடிசைகளில் வாழ்ந்துவரும் 20 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகளை வழங்கவுள்ளோம். ஏற்கனவே 6000 வீடுகள் அளவில் வழங்கப்பட்டுள்ளன. கழிவுகளை சரியானமுறையில் அகற்றுவதற்கும் பிரதேச சபைகளுடன் சர்வதேச நிறுவனங்களை இணைத்த திட்டமொன்று நடைபெற்று வருகின்றது.

போக்குவரத்து ஒழுங்குகள், அதிவேக நெடுஞ்சாலைகளைவிட நாம் பொதுமக்கள் போக்குவரத்து விடயங்களில் புகையிரத மற்றும் பஸ் போக்குவரத்தில் அதிக கவனம் செலுத்திவருகின்றோம். பல புகையிரத பாதைகளையும் இருவழிப்போக்குவரத்தாக மாற்றத் தீர்மானித்துள்ளோம். இலகு புகையிரத போக்குவரத்து திட்டமொன்றை கொழும்பு-மாலபே பிரதேசங்களை இணைத்து அறிமுகம் செய்யவுள்ளோம். பல தொகுதி போக்குவரத்து மையங்கள் 6 அமைக்கப்படவுள்ளன. கொட்டாவையில் அமைக்கப்படவுள்ள போக்குவரத்து மையம் ஆகஸ்ட் மாத்தில் ஆரம்பமாகவுள்ளதோடு, அதன் பின்னர் கொழும்பு உட்பட ஏனையவைகள் ஆரம்பமாகும்.

கொழும்பில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது. கொழும்பின் வெள்ளப்பெருக்கை கட்டுக்குள் கொண்டுவரும் வடிகாலமைப்பு திட்டமொன்றை விரைவில் வடிவமைக்க நடவடிக்கையெடுத்து வருகின்றோம்.

**கேள்வி:** போக்குவரத்து துறையில் ஏற்படுத்தப்படும் பிரதான மாற்றங்கள் குறித்து கூறமுடியுமா?

**பதில்:** போக்குவரத்து துறையில் பிரதான மாற்றங்கள் போக்குவரத்து அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் போக்குவரத்து நெரிசல், புகையிரத போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் போன்றவற்றை நாம் மேற்கொண்டு வருகின்றோம். புகையிரத போக்குவரத்தில் இலகு புகையிரத வசதிகளை ஏற்படுத்த தீர்மானித்துள்ளோம். இந்த திட்டத்திற்கான 7 நிலையங்களை தெரிவுசெய்துள்ளோம். அவற்றில் இரண்டை ஜப்பானின் நிதியுதவியுடன் மேற்கொள்ளவுள்ளோம். ஏனைய ஐந்தையும் தனியார் துறையினருக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்க இருக்கின்றோம். இது மொனோ ரைல் முறையல்ல. இது லைட் ரைல் முறையாகும்.

போக்குவரத்து நெரிசல், பாதையொழுங்குகளை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றிலும் கவனம் செலுத்தி வருகின்றோம்.

**கேள்வி:** கொழும்பில் புதிய போக்குவரத்து முறையால் மக்கள் அவதியுற்று ஏச ஆரம்பித்தனர். இதுதொடர்பாக...

**பதில்:** புதிய, நல்ல விடயங்களுக்கு விமர்சனங்கள் வருவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். ஆரம்பத்தில் மக்கள் போக்குவரத்தில் கஷ்டங்களுக்கு முகங்கொடுத்தனர். பின்னர் நிலைமை சாதாரணமானது. நான், பிரதியமைச்சர் பஸ் வண்டிகளில் பயணித்து பார்த்த பின்னரே போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொண்டோம். இவற்றை ஆதரிப்பது பொதுமக்களின் பொறுப்பாகும். நாம் பஸ் வண்டிகளுக்கென்று ஒழுங்கையொன்றை அறிமுகப்படுத்தியபின்னர் அதற்குள் முச்சக்கரவண்டியொன்றை செலுத்துவதும் பாரிய நெரிசலை ஏற்படுத்தும். அது எமது குறையல்ல. சட்டத்தை, ஒழுங்கை செயற்படுத்துவது மக்கள் கடமையாகும். வெளிநாடுகளில் பாதைகளுக்கும் வரிசெலுத்தவேண்டும். இங்கு அவ்வாறானதொரு நிலைமை இல்லை. புதிய பாதையொழுங்கை ஏற்பாடுகள் பயணிகளுக்கு வசதியாக உள்ளதாகவே பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். தொடர்ந்தும் அதனை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

**கேள்வி:** கோத்தாவுக்குப் பின்னர் கொழும்பு கவனிப்பற்று அழுக்கடைந்துள்ளதா?

**பதில்:** அதுவொரு பிரம்மை மாத்திரமே. மக்கள் அவ்வாறு நினைத்துக்கொண்டிருப்பதே தவிர உண்மையல்ல. இங்கு இரண்டு விடயங்களை கவனிக்க வேண்டும். கொழும்பை அழகுபடுத்தியது கோத்தாவல்ல. அது உலக வங்கியின் செயற்றிட்டமொன்றாகும். அது இன்னும் தொடர்கின்றது. இரண்டாவதாக இராணுவத்தினரைக் கொண்டு அவற்றை பராமரித்தனர். நல்லாட்சியில் இராணுவத்தினருக்கு உரிய இடம் வழங்கப்பட்டுள்ளது. கொழும்பில் நடைபாதைகளை அமைக்க மாதாந்தம் 175 இலட்சங்கள் அளவில் செலவாகின்றது. நடைபாதையை பாவிக்கும் பொதுமக்கள் இதற்காக பணம் செலுத்துவதில்லை. தனியார் உடற்பயிற்சி நிலையங்களுக்கு வருடமொன்றிற்கு இலட்சக்கணக்கில் செலவுசெய்பவர்கள் இங்கு இலவசமாக பயனடையலாம். அரசின் சொத்துக்களை இலவசமாக பாவித்துவிட்டு, பாழ்படுத்திவிட்டும் செல்கின்றனர். விலங்குகளை கொண்டு வந்து அசிங்கப்படுத்திவிடுகின்றனர். மக்களின் நடத்தைகளில் மாற்றம் ஏற்படவேண்டும்.

**கேள்வி:** கொழும்பில் அப்பல் தோட்டம் போன்று குடிசை வீடுகளில் வசிப்பவர்களுக்கான திட்டங்கள் ஏதும் உண்டா?

**பதில்:** ஏன் இல்லை. அப்பல் தோட்டத்துக்கு மக்களுக்கு தேவையான வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் மூன்று கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெறுமனே வீடொன்றை வழங்குவதல்ல. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்திலேயே செயற்பட்டு வருகின்றோம். தொழில், கல்வி, விளையாட்டு, கலை போன்ற அனைத்திலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம். அரச நிதியுதவிகள் இதற்கு வழங்கப்படுவதில்லை. அதனாலேயே வேலைத்திட்டங்கள் தொக்கியுள்ளன.

**கேள்வி:** கொழும்பிலுள்ள பூர்வீகக் குடிகள் வெளியேற்றப்படுவார்கள் என்ற பீதி அவர்களிடம் உள்ளதே...

**பதில்:** அது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். அப்பல் தோட்டத்து மக்களுக்கு அப்பிரதேசத்திலலேயே வீடுகள் அமைக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. இவர்களில் பூர்வீகக் குடிகள் என்று சொல்லிக்கொள்ளும் அளவுக்கு பெரும்பாலானோர் இல்லை. அவர்கள் 1995க்குப் பின்னர் அங்கு குடியானவர்களே.

**கேள்வி:** நாடு பாரிய கடன் சுமையொன்றில் உள்ளது. பொருளாதார நெருக்கடியொன்றும்கூட. இவ்வாறான வேளையில் நீங்கள் கூறும் அபிவிருத்தி முயற்சிகள் சாத்தியமா?

**பதில்:** உண்மையிலே அது மிகப் பெரும் பிரச்சினையாகும். நாடு கடன் சுமையொன்றில் உள்ளது. எனினும் மெகாபொலிஸ் திட்டத்திற்கு நாம் கடன் பெற்றுக்கொள்ளவில்லை. நாம் அனைத்து வேலைத்திட்டங்களையும்மே அரச, தனியார் இணைந்து முன்னெடுத்துச் சென்றோம். இதனால் கடன் பெறும் தேவை எமக்கு ஏற்படவில்லை. தனியார் நிறுவனங்கள் பாரிய முதலீடுகளை மேற்கொள்ளும்போது கடன் சுமையொன்று வரப்போவதில்லை.

**கேள்வி:** நாட்டில் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கும் முயற்சியொன்று நடைபெற்று வருகின்றது. இதுதொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** ஆம், கடந்த காலங்களில் ஒவ்வோர் அரசியல் கட்சிகளின் சுய விருப்பின் அடிப்படையில் அரசியலமைப்புகள் மாற்றப்பட்டன. திருத்தப்பட்டன. சிறிமா அம்மையாருக்கு மூன்றில் இரண்டு கிடைக்கும்போது அரசியலமைப்பை மாற்றினார். ஜனாதிபதி ஜயவர்தனவும் மூன்றில் இரண்டு பெற்று அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொண்டார். இம்முறை அனைத்து கட்சிகளின் கருத்து, விருப்பு, வெறுப்புகளை கவனத்திலெடுத்தே அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும். அனைவரினதும் சம்மதத்துடன் புதிய அரசியலமைப்பொன்று கொண்டுவரப்பட வேண்டும். அதுதான் எமது நிலைப்பாடாகும்.

**கேள்வி:** தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினர் அரசியல் தீர்வொன்றை எதிர்பார்த்துள்ளனர். அதுதொடர்பாக...

**பதில்:** இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்ற சிறுபான்மையினருக்கு ஏனைய நாடுகளில் வசிக்கும் சிறுபான்மையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இல்லை என்றே கூறவேண்டும்.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் முஸ்லிம்களுக்கு உள்ள பிரச்சினைகளும் தடைகளும் இலங்கையில் இல்லை. 1947இல் இருந்து முஸ்லிம் சமூகம் பிரதான அரசியல் கட்சிகளுடன் ஒன்றிணைந்து வேலைசெய்ய பயப்படவில்லை. சேர் ராசிக் பரீத், பதியுதீன் மஹ்மூத் ஆகியோரையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். முன்னாள் அமைச்சர் அஷ்ரபும் கட்சியொன்றை அமைத்தார். அது சிங்கள மக்களின் பிரச்சினைக்காகவல்ல. அது விடுதலைப் புலிகளின் பிரச்சினையாலாகும். முஸ்லிம்கள் தேசிய அரசியலில் இணைந்து செயற்பட்டுள்ளதால் முன்னேற்றமடைந்துள்ளனர்.

தமிழ் மக்களோ தொடர்ந்தும் தனித்து செயற்பட முற்படுகின்றனர். தமிழ் மக்கள் கஷ்டங்களை அனுபவிக்க காரணமானது யுத்தத்தால் மாத்திரமல்ல. அவர்களாகவே தனித்து செயற்பட ஆரம்பித்தனர். தனித்து செயற்படுவதை விட, இணைந்து செயற்படுவதிலேயே ஒற்றுமை உள்ளது.

உலக தீவிரவாத செயற்பாடுகளுக்கு பின்னர் முஸ்லிம்களை சந்தேக கண்கொண்டு பார்க்க ஆரம்பித்துள்ளனர். முஸ்லிம்கள் சிந்தித்து கருமமாற்ற வேண்டும். இலங்கை முஸ்லிம்கள் மலேசிய, இந்தோனேஷிய முஸ்லிம்களை முன்னுதாரணமாகக் கொண்டு, மத, கலாசார அம்சங்களையும் பேணி, நவீன, மிதவாத சிந்தனைகளுடன் சமூக முன்னேற்றம் குறித்து சிந்திக்க வேண்டும். இலங்கை முஸ்லிம்கள் ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவானவர்கள் என்பதற்கு எவ்வித சான்றும் இல்லை. தாலிபான் சிந்தனையில் அன்றி, முன்னாள் மலேசிய பிரதமர் மஹாதீர் முஹம்மதின் நவீன, மிதவாத சிந்தனையில் பயணிக்க வேண்டும்.

மஹாதீர் முஹம்மத் மலேசிய முஸ்லிம்களை நவீன, மிதவாத சிந்தனையில் செலுத்தினார். அதனால் மலேசியா முஸ்லிம் நாடாக இருப்பினும் வளர்ச்சிகண்டுள்ளது. ஈராக், சிரியா, லிபியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளும் வளர்ச்சிகண்டிருக்கவேண்டிய நாடுகளே. எனினும் அங்கு தலிபான் தீவிரவாத சிந்தனைகள் மிகைத்ததால் பாரிய அழிவுகளை எதிர்கொண்டுள்ளதைக் காண்கிறோம். இலங்கை முஸ்லிம்கள் தீவிரவாதத்தை ஆதரிப்பவர்களல்ல. தாலிபான் சிந்தனைகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை அவர்கள் அறிந்துவைத்துள்ளார்கள். மஹாதீர் முஹம்மத் போன்றோரே இலங்கைக்கு தேவை.

**கேள்வி:** தம்புள்ளை பள்ளிவாசல் பிரச்சினையும் இழுபறி நிலையில் உள்ளது. இதற்கு ஏதும் தீர்வுத் திட்டங்கள்?

**பதில்:** தம்புள்ளை பள்ளிவாசலுக்கு 20 பேச்சர்ஸ் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. 80 பேச்சர்ஸ் என்பது உண்மைக்குப் புறம்பான ஒன்றாகும். தம்புள்ளை பிரச்சினையை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாத்திரம் தீர்த்துவைக்க முடியுமான பிரச்சினையொன்றல்ல. தம்புள்ளையில் உள்ள பௌத்த, இந்து, முஸ்லிம் தரப்பினருக்கு கலந்துரையாடல்கள் மூலம் தீர்வொன்றுக்கு வர நாம் வழிகாட்டினோம். அவர்கள் இங்கு வந்து நாம் கூறும் தீர்வுத் திட்டங்களுக்கு ஒன்றுபடுகின்றனர். தம்புள்ளைக்கு சென்று மீண்டும் முரண்படுகின்றனர். இவ்வாறான முரண்பாடுகளால் அபிவிருத்திப் பணிகள் தாமதிப்பதும், முரண்பாடுகள் அதிகரிப்பதையும் தவிர வேறொன்றுமில்லை. கிராமங்களின் பிரச்சினைகளை தேசிய பிரச்சினையாக்க வேண்டிய அவசியமில்லை. இனங்களுக்கு மத்தியில் பேச தீர்த்துக்கொள்ள வேண்டும். நான் தம்புள்ளையில் வசிப்பவனல்ல. அப்பிரதேசத்தில் வசிப்பவர்கள் தீர்வு குறித்து முரண்பாடுகளை மறந்து சிந்திக்கவேண்டும்.

**கேள்வி:** எதிர்வரும் தேர்தல்களில் ஹெல உருமய தனித்து போட்டியிடுமா?

**பதில்:** நாம் எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியை பிரதானமாக கொண்ட தேசிய ஐக்கிய முன்னணியில் போட்டியிட எதிர்பார்க்கின்றோம். மாற்றங்கள் இருப்பின் பின்னர் சிந்திப்போம்.

# இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப பாடசாலைகள் சிறந்த களமாகும்

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்



இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு சிறந்த களமாக பாடசாலைகள் அமைந்துள்ளன. எனவே, பாடசாலை மட்டத்திலிருந்து அதற்கான முயற்சிகள் முன்னெடுக்க வேண்டும் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடியில் திங்கட்கிழமை நடைபெற்ற பாடசாலை நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நாட்டில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் இனங்களுக்கிடையில் சமாதானமும் - சமத்துவமும் நிலவும் என மக்கள் எதிர்பார்த்த போதிலும் நிலையான சமாதானம் - சமத்துவம் ஏற்படவில்லை. மாறாக இனங்களுக்கிடையில் சந்தேகம் - முரண்பாடுகளே அதிகரித்தன. இந்நிலையை மாற்றி நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் பல திட்டங்களை வகுத்துள்ளது.

நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு பாடசாலைகளும் சிறந்த களமாக அமைந்துள்ளன. இன நல்லுறவை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் பாடசாலை மட்டத்திலிருந்து முன்னெடுக்க வேண்டும். பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகள் மூலம் இன நல்லிணக்கத்தை சிறப்பான முறையில் கட்டியெழுப்ப முடியும் என நாங்கள் நம்புகின்றோம்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இந்த விடயத்தில் தமக்குள்ள பொறுப்புணர்வை உணர்ந்து செயற்பட வேண்டும். நாட்டின் எதிர்கால சந்ததிகளை பாடசாலைகளில் இருந்தே நாங்கள் உருவாக்குகின்றோம். பாடசாலைகள் அவர்களுக்கு நல்ல கல்வியை வழங்குவதில் மாத்திரம் நின்றுவிடாது அவர்களை இன நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகளிலும் ஈடுபடுத்த வேண்டும்.

ஒரு நாட்டில் அமைதியான சூழல் உருவாகினால் மாத்திரமே அந்நாடு பொருளாதார ரீதியாக முன்னேறும். இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் - சந்தேகங்கள் உள்ள நிலையில் எமது நாட்டை கட்டியெழுப்புவது கடினமாகும். நிலையான சமாதானம் இல்லாவிட்டால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்ய முன்வரமாட்டார்கள். இந்நிலை எமது எதிர்கால சந்ததிகளையே பாதிக்கும் என்றார்.



மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கரையோர சுத்திகரிப்பு வேலைத்திட்டமொன்று கல்கிசையில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு வருகை தந்த ஆளுநர் கே.சி. லோகேஸ்வரன் மற்றும் முதலமைச்சர் இசுர தேவப்பிரிய அகியோர் முதலமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் லலித் கன்னங்கர, அதிகாரசபையின் களுத்துறை மாவட்ட முகாமையாளர் நிரஞ்சனா ஜயசேன, பணிப்பாளர் கே. ஜயதிஸ்ஸ ஆகியோரினால் வரவேற்கப்படுவதைப் படங்களில் காணலாம்.

(படம் - எம்.எஸ்.எம். முன்தஸிர்)

# திருகோணமலையில் நல்லிணக்கம் தொடர்பான விழா!

(ஹஸ்பர் ஏ ஹலீம், கிண்ணியா)

நல்லிணக்கம் தொடர்பான கிழக்கு, வடக்கு மாகாண தேசோதய விசேட சம்மேளனம் 26-03-2017 ஞாயிற்றுக்கிழமை காலை10.00 மணிக்கு திருகோணமலை - உவர்மலை விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் கிழக்கு, வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள் அத்துடன் முக்கியமாக சர்வோதய தலைவர் கலாநிதி ஆரியரத்னவுடன் சிறப்பு விருந்தினர்களின் பங்குபற்றலுடன் நடைபெறவுள்ளது.

நல்லிணக்கம் தொடர்பான இவ் விழாவில் வடக்கு, கிழக்கில் இருந்து சுமார் 1200க்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர் என திருகோணமலை மாவட்ட சர்வோதய தேசோதய விழா ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

# முன்னாள் ஜனாதிபதி மஹிந்த முஸ்லிம்களுக்கு செய்த சேவைகளை மறைக்க முடியாது

## முஸ்லிம் பிரிவு அமைப்பாளர் முஹாரிஸ்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முஸ்லிம்களுக்கு செய்த உதவிகளை மறைக்கவோ மறுக்கவோ முடியாது என ஸ்ரீலங்கா பொதுசன பெரமுனையின் செயற்பாட்டாளரும் மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முஸ்லிம் பிரிவின் முன்னாள் அமைப்பாளர் ஏ.ஏ. முஹாரிஸ் தெரிவித்தார்.

கல்முனை மாநகரசபை முன்னாள் உறுப்பினர் முஹம்மத் அமீர் அண்மையில் விடுத்திருந்த அறிக்கைக்குப் பதிலளித்து விடுத்துள்ள அறிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தம்புள்ளை பள்ளிவாசல் தொடக்கம் அளுத்கம வரை எரிந்து கொண்டிருந்தபோது முஸ்லிம்களின் அழுகுரல் கேட்காமல் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் என்று முன்னாள் ஜனாதிபதியையும் அதனுடன் முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ்வையம் தொடர்புபடுத்தி குறிப்பிட்டிருந்தார்.

முன்னாள் மாநகரசபை உறுப்பினர் ஒன்றை மாத்திரம் விளங்கிக் கொள்ள வேண்டும். உங்களுடைய அரசியல் இலாபத்திற்காக இவ்வாறு மக்கள் மத்தியில் ஒரு பொய்யான புரளியை உருவாக்க வேண்டாம். நீங்கள் முஸ்லிம்களின் மீது அக்கறை உள்ளவராக இருந்தால் இவ்வாறு பேசமாட்டீர்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட வகையில் முஸ்லிம்களுடன் எவ்வாறு இணைந்திருந்தார் என்பதையும் முன்னாள் ஜனாதிபதி செய்த முஸ்லிம்களுக்கான உதவிகளையும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. தற்பொழுது உங்களுடைய நல்லாட்சியில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டனவா அதற்காக வேண்டி ஏன் நீங்கள் குரல் கொடுப்பதில்லை பார்த்து மௌனமாக இருக்கின்றீர் இதுதான் செவிடன் காதில் ஊதுகின்ற சங்கு அல்லவா.

# 47 மருந்து கலவையாளர்களுக்கான நியமனம் வழங்கி வைக்கப்பட்டது



(பைஷல் இஸ்மாயில், அட்டாளைச்சேனை)

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீரின் முயற்சியினால் கிழக்கு மாகாணத்தில் 47 பேருக்கான மருந்து கலவையாளர்கள் நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வு 20ஆம் திகதி திங்கட்கிழமை கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர்;

கிழக்கு மாகாணத்தில் 59 மருந்து கலவையாளர்களுக்கான வெற்றிடம் உள்ள போதும் நாம் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் பலனாக இன்று 47 பேருக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வகையில் நியமனம் வழங்கி வைக்கப்பட்டது . அதில் ஏற்கனவே வழங்கி வைக்கப்பட்ட மருந்து கலவையாளர்களுக்கான நியமனங்களில் ஏனைய மாகாணங்களுக்கு வழங்கிய நியமனம் இரத்து செய்து இம்முறை அனைவரும் கிழக்கு மாகாணத்தில் உள்ளீர்க்கப்பட்டனர் என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

அது போல் மிகுதியாகவுள்ள மருந்து கலவையாளர்களுக்கான வெற்றிடம் மிக விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு முழு கிழக்கிலும் எந்த இடர்பாடுகளும் இல்லாமல் மருந்து கலவையாளர்கள் வெற்றிடம் பூர்த்திசெய்யப்படும். அது போல் மருந்து கலவையாளர்கள் தங்களது கடமையை மிக நேர்த்தியான முறையில் செய்வீர்கள் எனவும் தங்களுக்கு மேல் உள்ள அதிகாரிகளுடன் அவர்களின் உத்தரவுகளுக்கு அமைய உங்களுக்கு வழங்கப்படுகின்ற இடத்திற்கு ஏற்றாப்போலும் செயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, கிழக்கு மாகாண பணிப்பாளர் கே.முருகானந்தன், செயலாளர் கருணாகரன், உதவிச்செயலாளர் உசைனுடன் மேலதிக மாகாணப் பணிப்பாளர் லதாகரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# கிழக்குப் பல்கலையின் திருமலை வளாகம் மூடப்பட்டது

## பரீட்சைகளும் ஒத்தி வைப்பு

(ஏறாவூர் நிருபர் -ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

வகுப்புத் தடை மாணவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையால் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் கடந்த திங்கட்கிழமை முதற்கொண்டு காலவரையின்றி மூடும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதனால் திங்கள் முதல் நடைபெறவிருந்த பரீட்சைகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக் கழக நிருவாகம் தெரிவித்தது.

மேலும், விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் அனைவரையும் உடனடியாக வெளியேறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் அறிவித்தனர்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி திருகோணமலை வளாகத்தில் கடமைபுரியும் விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரை மாலை 4 மணியிருந்து இரவு 10 மணிவரை சில மாணவர்கள் தடுத்து வைத்து அவஸ்தைக்குள்ளாக்கினர் என்ற காரணத்தினால் 16 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது.

அவ்வாறு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ள தமது சக மாணவர்களையும் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்குமாறு கோரி அவ்வளாக மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை(20) எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இக்குழப்ப நிலைமையின்போது காவலாளி ஒருவரும் மாணவர் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

# வெலிமடை ரபீக்கின் 'பூக்காலம்' - நூல் வெளியீடு

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

மூத்த எழுத்தாளர் வெலிமடை ரபீக் எழுதிய 'பூக்காலம்' என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 04.00 மணிக்கு கொழும்பு - 12(வாழைத் தோட்டம்) அல் - ஹிக்மா கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'வெள்ளிப்பு வெளி' அமைப்பின் ஏற்பாட்டில் கவ்யாபிமானி தாஜுல் உலூம் கலைவாதி கலீல் தலைமையில் நடைபெறும். இவ்வெளியீட்டு விழாவில், பிரதம அதிதியாக முன்னாள் கல்விபீடப் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் கலந்து கொள்கிறார்.

இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் முதல் பிரதியைப் பெறுவதோடு, முல்லை முஸ்ரிபாவின் வெளியீட்டுரையுடன் மேமன் கவியின் கருத்துரையும் இடம் பெறுகிறது.

திக்கோயா எம்.எச்.எம். ஜவ்பர் திறனாய்வுரையும் நஜ்முல் ஹுசைனின் கவிதைப் பொழிவும் நிகழ்வில் இடம் பெறுகிறது.

விழாவின் ஏற்புரையை நூலாசிரியர் வெலிமடை ரபீக் வழங்குவதோடு, கிண்ணியா அமீரலி நிகழ்சியை தொகுத்து வழங்கவுள்ளார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் வாழிகாட்டலில் 'வீட்டுக்கு வீடு மரம்' வேலைத்திட்டத்தின் கீழ் மரநடுகைத்திட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் கட்சியின் இளைஞர் அமைப்பாளரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான ஆரிப் சம்சுதீன் தலைமையில் (19) ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இதில் கட்சியின் இளைஞர் அணியினர் பலர் கலந்து கொண்டு தங்கள் பங்களிப்பினையும் வழங்கினர்.

(படம் - கல்முனையூர் அப்றாஸ்)

# முஸ்லிம் காங்கிரஸுக்குள் பாரிய பிரச்சினைகள்; கட்சிக்குள் உள்ளவர்களே நொந்துகொள்ளும் நிலை

## மக்கள் காங்கிரஸ் அமைப்பாளர் ஏ.ஆர்.எம். ஜிப்ரி





(ஜெஸ்மி எம்.மூஸா, மருதமுனை)

பல்வேறு தியாகங்களுக்கு மத்தியில் தலைவர் மர்ஹூம் அஷ்ரஃபால் உருவாக்கப்பட்ட கட்சிக்கு கோடிக்கணக்கில் சம்பாதிக்கின்ற தொழிலைச் செய்வதற்கு நாம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனைத் தொகுதி அமைப்பாளர் ஏ.ஆர்.எம்.ஜிப்ரி தெரிவித்துள்ளார்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிஸாட் பதியுதீனின் வழிகாட்டலில் கல்முனைத் தொகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள கட்சிப்பரவலாக்கல் நடவடிக்கையின் முதலாவது கூட்டம் மருதமுனையில் இடம்பெற்ற போதே அமைப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்

வர்த்தகக் கைத்தொழில் அமைச்சின் அபிவிருத்தி திட்டமிடல் இணைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான எம்.எல்.எம்.துல்ஹர் நஹீம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் மக்கள் காங்கிரஸின் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டனர்

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைப்பாளர்

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. கட்சிக்குள் உள்ளவர்களே அவர்களை நொந்து கொள்ளும் நிலைக்கு அதன் தலைமை கட்சியை மாற்றியுள்ளது. கடந்த காலங்களில் பேரம் பேசுதல் என்ற பாணியில் செய்த பணப்பரிமாறல்கள் குறித்து கட்சிக்காரர்களே பிரஸ்தாபித்து வருகின்றனர். கட்சிக்குள் ஏற்பட்ட அதிருப்தியை அடுத்து கல்முனைத் தொகுதியிலுள்ள முக்கியஸ்தர்கள் இருபது பேர் வரை அகில இலங்கை மக்கள் காங்கிரசுக்குள் வருவதற்கான தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர். நல்லதொரு சந்தர்ப்பத்தில் இதனை அரங்கேற்றுவதற்காக நாம் காத்திருக்கின்றோம்

எந்த விதமான அறிமுகமும் இல்லாத நிலையிலும் நாம் திகாமடுல்ல தொகுதியில் முப்பத்தி மூவாயிரம் வாக்குகளை கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பெற்றோம். அனுராத புரத்தில் பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்று சாதனை படைத்தோம். நமது கட்சிக்கான ஆதரவுகள் பெருகிவருகின்றன. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுவதற்கான வியூகத்தை அமைத்திருக்கின்றோம்.

நாம் அபிவிருத்திகளையும் செய்யாது உரிமைகளையும் பேசாது மக்களை ஏமாற்றுகின்ற கட்சி அல்ல. எமது தலைவர் எதனையும் துணிந்து ஆற்றும் வல்லமை கொண்டவர். மக்கள் சேவகர். நமது தலைவரின் சேவைகளையும் அமைச்சர் ஹக்கீமின் சேவைகளையும் மக்களுக்கான நடவடிக்கைகளையும் நிதானமாக ஒப்பிட்டுப் பாருங்கள்.

நமது தலைமை எங்குள்ளதென்று

மக்கள் காங்கிரஸ் ஏதாவது அபிவிருத்தியை அம்பாறையில் கொண்டு வந்தால் அதனைத் தடுக்கின்ற அல்லது அதற்குப் பெயர் வாங்குகின்ற வேலைகளையே முஸ்லிம் காங்கிரஸ் செய்து வருகின்றது. மருதமுனையின் நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த காரியப்பர் வீதியை காபட் வீதியாக மாற்றுவதற்கு எடுத்த முயற்சியைக் கூட முஸ்லிம் காங்கிரஸ் தடுத்திருப்பது இதற்கு நல்ல உதாரணமாகும்

நமது தலைவர் றிஸாட் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டார். நமது மக்களுக்கு என்ன செய்யலாம் என்பதையே அதிகம் சிந்திப்பார். ஏ.ஸீ.எஸ். ஹமீட் எவ்வாறு நமது மாணவர்களுக்கு வெளிநாட்டு மருத்துவப் புலமைப் பரிசிலை பெற்றுக் கொடுத்தாரோ அவ்வாறே பாகிஸ்தானுக்கான ஐம்பது புலமைப்பரிசில் எமது மாணவர்களுக்காக எடுத்துவரப்பட்டிருக்கிறது

இன்று எமது கட்சியுடன் இணைந்துள்ள நீங்கள் அனைவரும் இனிமேல் இக்கட்சியின் பங்குதாரிகள். எதிர்காலத்தில் உங்களுடாகவே அபிவித்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இக்கட்சி தொடர்பில் கேள்வி கேட்டு இதனை வழிப்படுத்தும் ஜனநாயக உரிமையும் ஒவ்வொருவருக்கும் உண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

# அரசியலமைப்பு அரசாங்கத்தை மீளக்கட்டியெழுப்புதல்

**சூரி ரத்னபால**

**(திங்கள் தொடர்ச்சி...)**

உண்மையான வரிகுறைப்பு முறைகள் ஆதரவளிக்கும் நிலைமைகளைக் கருத்திற்கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டும். மக்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுப்பது என்பது அவர்களின் பிரத்தியேக கொடுக்கல்வாங்கல்கள் சந்தைப் பொருளாதாரத்தின் அடிப்படையாக அமைவதோடு இறுதியாக அரசியலமைப்பு அரசாங்கத்திற்கும் பொருந்தும். உலகமயமாக்கல் என்பது அரசியலமைப்பு அரசாங்கத்திற்கு உதவி செய்வது எவ்வாறெனில், அரசியலமைப்பு முறைமைகளை போட்டி நிலைக்கு வெளிப்படுத்தலாகும். உலகமயமாக்கலின் பாரிய நன்மையாக அரசியலமைப்பு அரசாங்கத்தை விரிவுபடுத்துவதற்கான முன்னேற்றகரமான சுபீட்சங்களைப் பெற்று உலகின் பல பாகங்களிலுமுள்ள மக்களுக்கு வழங்குவதாகும். எனினும் இற்றைவரை அதன் நன்மைகளை அவர்கள் அனுபவிக்கவில்லை. முன்னர் விவாதிக்கப்பட்டது போல, இந்த அபிவிருத்தி என்பது தராதரமற்ற பண்டம் மாத்திரமல்லாது உலகின் அபிவிருத்தியடைந்த பகுதிகளில் அரசியலமைப்பு அரசாங்கத்தின் பாதுகாப்பை நீண்ட காலப் போக்கில் பேணுவதற்கு அவசியமான படிநிலையாகவும் அமைகிறது. பல தசாப்த காலங்களாக Peter Bauer என்பவர் வெற்றிகரமற்ற முறையில் விவாதித்தது யாதெனில், உள்நாட்டு வர்த்தகம் மூன்றாம் மண்டல நாடுகளை வறுமையின் பிடியிலிருந்து விடுவிக்கிறது. அவரது விடயம் தொடர்பில் உபஉரைப்பகுதியின் விவாதம் யாதெனில், நிறுவனம்சார் அமைப்புகள் உள்நாட்டு வியாபாரம் நடைபெறுவதற்கு உதவுகிறது; - குறிப்பாக, அரசியலமைப்பு அரசாங்கம் மரபுரீதியான பொருள்படக் கூறுவதாயின் - இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மிக முக்கிய பங்களிப்புச் செய்கிறது. Bauer என்பவரின் கூற்றுப்படி இறுதி யதார்த்தமாக நாடுகள் உலக சந்தையின் பங்காளிகளான உள்ளூர் செல்வாக்குமிக்கவர்கள் மற்றும் சர்வதேச முகவராண்மைகள் சந்தை விடயத்தில் வெற்றிகரமாக அமைவதற்கான புரிந்துணர்வை ஏற்படுத்துகிறது.

எனினும், உலகமயமாக்கல் தனது சொந்த அரசியலமைப்பிற்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்துமா? என்பது பற்றி நாங்கள் பரிசீலிக்க வேண்டியுள்ளது. நாட்டின் பொதுச் சட்டங்கள் தொடர்பில் பகிரங்க மற்றும் தனியார் அதிகாரங்கள் ஆகிய இரு விடயங்களையும் அரசியலமைப்பு அரசாங்கம் கருத்திற்கொள்கிறது. கேள்வி என்னவெனில், சுதந்திர அரசியலமைப்பு அதன் சட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் உலக சந்தைகளின் பங்கீட்டாளர்களின் நடத்தையை ஆளுகை செய்ய முடியுமா? என்பதாகும். இத்தகைய சாத்தியம் நியாயாதிக்கத்திற்குட்பட்ட எல்லைகள் மற்றும் எல்லை கடந்த சட்ட செயற்படுத்துகையின் நடைமுறைச் சாத்தியமின்மை ஆகிய இரண்டினாலும் வரையறுக்கப்பட்டுள்ளது. இத்தகைய நிபந்தனைகள் எந்த அளவிற்கு சட்ட ஆட்சிக்குச் சவாலாக அமையும்? நூற்றாண்டு காலமாக, வியாபாரிகள் தமது பிரச்சினைகளை அரச உபகரணங்களில் பிரதானமாக தமது சொந்த Lex mercatoria எனும் வர்த்தகச் சட்டத்தைப் பிரயோகிக்கும் தமது சொந்த நடுத்தீர்ப்பாளர்களின் மூலம் அதிகுறைந்த உதவியுடன் முகாமைத்துவம் செய்துள்ளனர். மிகவும் நெருக்கமான பின்னிப்பிணைந்த வர்த்தக சமூகத்தில் தற்போதைய வர்த்தகத் தொடர்புகள் மற்றும் அவர்களின் உறுப்புரிமைகள் தொடர்பாக பேணுவதில் உள்ள அவர்களின் பொதுவான கரிசனைகள் இந்த முறைசாராத முறைமையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு உதவுகிறது. கடந்த காலங்களில் வியாபாரிக்கு வியாபாரி எனும் வர்த்தகத்திலிருந்து வேறுபடுகின்ற நாடு கடந்த நுகர்வோர் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறவில்லை. இன்றைய உலகளாவிய சந்தை இணையத்தளம் மற்றும் ஏனைய வழிமுறைகள் மூலம் நாட்டின் எல்லைகளைக் கடந்து சென்று கொடுக்கல்வாங்கல் செய்யும் நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பினால் வெளிக்காட்டப்படுகிறது. அத்தகைய சட்டங்களின் உள்ளூர் கூற்றுகளின் மீது வடிவமைக்கப்பட்ட சர்வதேச நுகர்வோர் - பாதுகாப்புச் சட்டங்களுக்கு ஆதரவாக விரிவுரையாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோர் குரல்கொடுக்கின்றனர். இத்தகைய விண்ணப்பங்கள் அல்லது முறையீடுகள் புதிய சட்டங்களாக வழிவகுக்கலாம் அல்லது வழிவகுக்காது விடலாம். அப்படி அவை செய்தால், தாக்கமேதும் இருக்க மாட்டாது. இந்த ஆக்கபூர்வமான அபிப்பிராயம் என்பது விடயத்தைக் கவனிப்பதற்கென முறைசாராத சந்தையை அடிப்படையாகக் கொண்ட நிறுவனம்சார் பொறிமுறைகள் எழுந்தன. பிரச்சினைகள் நாடுகடந்த வர்த்தகம் தொடர்பில் சிறப்பானவையல்ல. வர்த்தக பிரதிநிதித்துவ அடிப்படையின் பேரில் அதிகளவு நுகர்வோர் வர்த்தகம் நடைபெறுகிறது. அத்துடன், நாடுகடந்த வர்த்தகத்தில் வர்த்தகர் - நுகர்வோர் தொடர்புகளுக்கு சமமான அமைப்புகள் தோன்றமாட்டாது என முன்மொழிவதற்கு எவ்வித காரணமும் இல்லை.

பல்தேசிய கூட்டுத்தாபனங்கள் வியாபாரத்தை மீண்டும் ஆரம்பிக்கும் ஆற்றல் காரணமாக அவற்றின் சட்டபூர்வமற்ற செயற்பாடு மற்றும் விடுபாட்டுரிமையுடன் அவை ஈடுபடலாம் என்பது தொடர்பில் உலகமயமாக்கல் அவற்றின் அதிகரிக்கும் அதிகாரத்திற்கு வழிவகுக்கலாம் என சில அவதானிப்பாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். வாதங்கள் தொடரும் வேளையில், அரசாங்கங்கள் மூலதனத்தை இயங்கவைக்க வேண்டுமென உணருகையில் அவர்கள் பொது மக்களின் கரிசனை மற்றும் சட்ட ஆட்சி ஆகியவற்றை அர்ப்பணிப்பு செய்ய வேண்டியுள்ளது.

இத்தகைய அச்சங்களே இறுதியாக நிறுவனம்சார் அச்சங்களாக மாறுகின்றன. முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தேவதைகள் அல்ல என்பதுடன் அவர்கள் தேவதைகளாக நடந்துகொள்ள வேண்டும் என நாம் எதிர்பார்க்கக்கூடாது. வெற்றிகரமான அரசியலமைப்பு Hume என்பவரின் குற்றத்தீர்ப்பு ஞாபகார்த்த உரையில் கூறப்பட்டது போல் அரசாங்கத்தை அரசியலமைப்பின் பல்வேறு சமவலுக்கள் மற்றும் கட்டுப்பாடுகளில் நிலைத்து நிற்கச் செய்யும்போது மனிதன் தனது பிரத்தியேக கரிசனைகளிலும் பார்க்க அவனது சகல செயல்களிலும் ஏதேனும் முடிவு இராது'(1964, 1:117 - 18) என்பதில் தங்கியுள்ளது.

**(முற்றும்)**

---

## நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

## விலைமனு அறிவித்தல்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வழங்கல்கள் / வேலைகளுக்காக தகைமை மற்றும் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணைமுறி | தகைமை தேவைப்பாடுகள் | மதிப்பீட்டு செலவு(ரூபா) வெட் வரி நீங்கலாக | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | |
| வெல்லவாய நீர் வழங்கல் திட்டத்தில் OIC அலுவலகத்தை மேம்படுத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/REH/MONARAGALA/2017/24** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 147,000/- | கட்டிட கட்டுமான துறையில் c8 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவு சான்றிதழ் | 9.8 மில்லியன் | கேள்விகள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., மெதிரியவீதி, பதுளை.<br>தொலைபேசி: 0552230934,<br>தொலைநகல்: 0552230974 | 05/04/2017 14.00 மணி |
| **இயந்திரம் மற்றும் மின்னியல் கேள்விகள்** | | | | | | |
| மாத்தளை நீர் வழங்கல் திட்டத்திலுள்ள சுத்திகரிப்பு நிலையத்தின் பலபத்வல பம்பி திட்டத்துக்கு கிடை பிரிவு பம்பி தொகுதி ஒன்றையும், எழுச்சி கலனையும், உதிரிப்பாகங்களையும் வழங்கி, விநியோகித்து, பொருத்துதல்<br>**ஒப்பந்த இல: RSC-C/M&E/S&I/PUMP/ENERGY/MATALE/2016/20** | 8,000/- + பெ.சே. வரி | ரூபா. 179,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை.<br>தொ.பே: / தொ.நகல்: 011-2635885 | 21/04/2017 10.00 மணி |
| மொனராகலை நீர் வழங்கல் திட்டத்துக்கு நீர்மூழ்கி பம்பி தொகுதிகள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, பொருத்துதல்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/RECH/MONARAGALA/2017/04** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 30,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | கேள்விகள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., மெதிரியவீதி, பதுளை.<br>தொலைபேசி: 0552230934,<br>தொலைநகல்: 0552230974 | 05/04/2017 14.00 மணி |
| வெலிமட நீர் வழங்கல் திட்டத்துக்கு நீர்மூழ்கி பம்பி தொகுதிகள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, பொருத்துதல்<br>**ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/TBP/WELIMADA/2016/157** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 145,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | கேள்விகள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., மெதிரியவீதி, பதுளை.<br>தொலைபேசி: 0552230934,<br>தொலைநகல்: 0552230974 | 05/04/2017 14.00 மணி |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 160 தொன் வெளுப்புக் காரத்தை (பிளீச்சிங் பவுடர்) வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல: SUP&MM/CHEM/BP/2017/01** | 8000/- + பெ.சே. வரி | ரூபா. 250,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை.<br>தொ.பே: / தொ.நகல்: 011-2635885 | 20/04/2017 10.00 மணி |
| நில நீர் பிரிவுக்கு IM III ஆழ் கிணறு கை பம்பி உதிரிப்பாகங்களை வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல: ADDL.GM/P&P/GWP/I M III/SPARE PARTS/2017-03** | 10,000/- + பெ.சே. வரி | ரூபா. 460,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை.<br>தொ.பே: / தொ.நகல்: 011-2635885 | 24/04/2017 10.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்தல்** | | | | | | |
| குண்டசாலை நீர் வழங்கல் திட்டத்தின் புலுவெமுதுன – பன்வில வலயத்துக்கு ஒரு Crew Cab வாகனத்தை வாடகைக்கு அமர்த்தல<br>**ஒப்பந்த இல: RSC/KE/SERVICES/O&M/KUNDASALE/2017/48** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 27,100/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்திய) கெடம்பே, பேராதனை<br>தொலைபேசி: 081-2386068, தொலைநகல்: 081-2388027 | 05/04/2017 14.00 மணி |
| கேகாலை பிராந்தியத்துக்கு ஒரு பெகோ ஏற்றியை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC(SAB)/AGM(KEG)/O&M/KEGALLE REGION/SER/2017/13** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 20,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (சபரகமுவ) தே.நீ.வ.வ.ச., நியூ டவுன், இரத்னபுரி.<br>தொலைபேசி: 045-2228274-6,<br>தொலைநகல்: 045-2228273 | 05/04/2017 14.00 மணி |
| தெஹிவளை பிராந்தியத்துக்கு 06 Crew Cab வாகனங்கள் அல்லது Double Cab வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல் மற்றும் (பாணந்துறை-ஹொறனை) முகாமையாளருக்கு ஒரு வேன் வாகனத்தை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: W-S/P&C/H(02)/DGM/O&M/2017/27** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | தொடர்புடைய வாகன உரிமையாளர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் தெற்கு) தே.நீ.வ.வ.ச., இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, அங்குலான, மொரடுவை.<br>தொலைபேசி: 0112224888, தொலைநகல்: 0112637945 | 06/04/2017 10.00 மணி |
| **சுத்திகரிப்பு சேவைகள்** | | | | | | |
| மாத்தளை நீர் வழங்கல் திட்டத்தில் சுத்திகரிப்பு வேலைகள்<br>**ஒப்பந்த இல: RSC-C/KN/SER/O&M/MATALE/2017/22** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 42,874/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்திய) கெடம்பே, பேராதனை<br>தொலைபேசி: 081-2386068, தொலைநகல்: 081-2388027<br>**கேள்விமனுக்கு முந்திய கூட்டம்: 03/04/2017** | 05/04/2017 14.00 மணி |
| **இரும்பு வேல்டிங் வேலை** | | | | | | |
| நீர் தொட்டிகளை வைப்பதற்கான அகற்றமுடியுமான GI தாங்கிகளை உருவாக்கல்<br>**ஒப்பந்த இல: RSC-C/P&D/MECH/DROUGHT/2017/71** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 23,000/- | இரும்பு வேல்டிங் துறையில் அனுபவம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்திய) கெடம்பே, பேராதனை<br>தொலைபேசி: 081-2386068, தொலைநகல்: 081-2388027 | 29/03/2017 14.00 மணி |

தகுதித்தன்மைக்கான சான்றுகளுடன் வியாபாரக் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். மற்றும் **இறுதித் திகதிக்கு முன்னைய நாள்** வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

கேள்விகள் மூடப்பட்டவுடனேயே சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். **தாமதமாக விலைமனு சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.**

**தவிசாளர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்**

# உலகச் செய்திகள்

## 8 இலட்சம் மக்கள் பலிகொண்ட ருவாண்டா இனப்படுகொலை

### மன்னிப்பு கேட்ட போப்




சுமார் 8 இலட்சம் மக்கள் கொல்லப்பட்ட ருவாண்டா இனப்படுகொலைக்கு அப்போதைய கத்தோலிக்க சபை காரணமாக இருந்ததற்காக போப் பிரான்சிஸ் தற்போது கடவுளிடம் மன்னிப்பு கேட்பதாக தெரிவித்துள்ளார்.

கடந்த 1994ஆம் ஆண்டு ருவாண்டாவில் டுட்சி இன மக்கள் மீது ஹூடு இனத்தவர்கள் தொடர்ந்து நடத்திய ஆயுதத் தாக்குதல் மூலம் இனப்படுகொலை செய்த போது கிட்டத்தட்ட 8 இலட்சம் டுட்சி இன மக்கள் மற்றும் இன்னும் சில சிறுபான்மை இனத்தவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அந்நாட்டில் அப்போது இருந்த கத்தோலிக்க திருச்சபைகள் ஹூடு இனத்தவர்களுக்கு ஆதரவாக இருந்ததாக அப்போது குற்றச்சாட்டு எழுந்தது. இந்நிலையில், போப் பிரான்சிஸ், 'சேர்ச் மற்றும் அதன் நபர்கள் இழைத்த பாவங்களுக்கு கடவுளிடம் மன்னிப்புக் கேட்கிறேன்' என தெரிவித்துள்ளார்.

## ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியிலிருந்து மொசூலை மீட்க உச்சகட்டப் போர்

### உயிர் அச்சத்தில் அப்பாவி பொதுமக்கள்



ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியிலிருந்து ஈராக்கின் பழம்பெருமை வாய்ந்த மொசூல் நகரை மீட்பதற்காக நடைபெற்று வரும் உச்சகட்டப் போரால் அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர்ப் பயத்தில் பீதி அடைந்துள்ளனர்.

ஈராக்கின் டைக்ரிஸ் நதிக்கரை ஓரத்தில் அமைந்துள்ள முக்கிய பெருநகரமான மொசூலில் சுமார் 15 இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். கடந்த 2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்நகரை கைப்பற்றினர். அதுமட்டுமன்றி இந் நகரை தீவிரவாதிகளின் தலைமையிடமாக மாற்றியுள்ள இவர்கள் இங்கிருந்தவாறு உலகம் முழுவதும் அப்பாவி மக்களை குறிவைத்து தீவிரவாத தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இவர்களை ஒழிக்க ஈராக் இராணுவப் படைகளுடன் அமெரிக்க விமானப்படையும் துணையாக தாக்குதல் நடத்தி வருகிறது. ஈராக் தலைநகர் பாக்தாத்திலிருந்து சுமார் 360 கிலோமீற்றர் வடமேற்கே உள்ள இந்நகரை தங்களது ஆதிக்கத்தில் வைத்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் அங்குள்ள மக்களை மொசூல் நகரைவிட்டு வெளியேற விடாமல் மிரட்டி, தடுத்து வைத்துள்ளனர். அரசுக்கு உளவு பார்ப்பதாக சந்தேகித்து பலரை கொன்றும் குவித்துள்ளனர்.

மொசூலை கைப்பற்ற அமெரிக்க கூட்டுப்படையினரின் துணையுடன் ஈராக் இராணுவம் எடுத்துவந்த பல்வேறுகட்ட நடவடிக்கைகள் பெரியளவிலான பலன் தரவில்லை. மொசூல் நகருக்கு செல்லும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கும் தடை விதிக்கப்பட்டதால் அங்குள்ள மக்கள் பசி, பட்டினியாலும், கடும் நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மொசூல் நகரை ஆக்கிரமித்துள்ள ஐ.எஸ்.தீவிரவாதிகள் மீது உச்சகட்ட தாக்குதல் நடத்தி, அந்நகரை உடனடியாக மீட்குமாறு ஈராக் பிரதமர் ஹைதர் அல் அபாடி கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் உத்தரவு பிறப்பித்தார்.

இதனையடுத்து, கடந்த ஆறு மாதங்களாக நடைபெற்றுவரும் உச்சகட்ட தாக்குதலில் ஈராக் இராணுவம் மற்றும் தீவிரவாதிகள் தரப்பில் பலர் உயிரிழந்தனர். அப்பாவி பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். உயிர் பயத்தில் சுமார் 2 இலட்சம் மக்கள் மொசூலில் இருந்து வெளியேறியுள்ளனர்.

சமீபத்தில் இங்குள்ள பல்கலைக்கழகம் உள்ளிட்ட முக்கிய அரசு கட்டடங்களை அரசுப் படைகள் கைப்பற்றிய நிலையில், கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் உச்சகட்ட தாக்குதலின் விளைவாக அங்கு வாழும் பல்லாயிரக்கணக்கானோர் உயிருக்கு பயந்தவாறு பீதியில் உறைந்துள்ளனர்.

போர் நடைபெற்று வரும் நிலையில் நகரின் உள்ளே வீடுகளில் மறைந்திருந்தாலும் கொல்லப்படுவோம், இருதரப்பினரும் துப்பாக்கிகள் மற்றும் பீரங்கிகளால் தாக்கிக் கொள்ளும் போர்முனையை கடந்து வெளியே செல்ல முயன்றாலும் கொல்லப்படுவோம் என்ற பீதியில் இங்குள்ள மக்கள் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் ஒரு யுகமாக கடத்தி வருவதாக ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இருந்து நேற்று வெளியாகிய செய்திகள் குறிப்பிடுகின்றன.



தாய்லாந்தின் தேசிய யானைகள் தின நிகழ்வு அண்மையில் கொண்டாடப்பட்டது. தேசிய யானைகள் தினத்தை முன்னிட்டு தாய்லாந்தின் பண்டைய நகரங்களில் ஒன்றான அயுத்தாயாவில் நடைபெற்ற யானைச் சண்டையில் பல யானைப் பாகன்கள் தமது யானைகளுடன் கலந்துகொண்டிருந்தனர். போட்டியில் இரு யானைகள் மற்றும் யானைப் பாகன்கள் மோதிக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

### சிந்துநதி நீர் பங்கீடு:

## இந்தியா - பாக். இடையே பேச்சுவார்த்தை ஆரம்பம்



சிந்துநதி நீர் பங்கிடு தொடர்பாக இந்தியா - பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயான இரண்டு நாள் பேச்சுவார்த்தை இஸ்லாமாபாத்தில் தொடங்கியுள்ளது.

இந்தியா தரப்பில் சிந்து நீர் கமிஷனர் பி.கே.சக்சேனா தலைமையில் 10 பேர் கொண்ட குழுவினர் கலந்து கொண்டனர். பாகிஸ்தான் அதிகாரி மிர்ஸா அசிப் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்று வருகிறது.

கடந்த 1960ஆம் ஆண்டு இந்திய முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி ஆயூப் கான் ஆகியோர் முன்னிலையில் பாகிஸ்தானின் கராச்சியில், சிந்து நதி நீர் பங்கீட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது.

சிந்து நதி தொகுப்பில் இந்த நதிக்கு கிழக்கேயுள்ள ரவி, பியாஸ், சட்லஜ் ஆகிய நதிகளை இந்தியா முழுமையாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், மேற்கேயுள்ள ஜீலம், செனாப், சிந்து ஆகிய நதிகளை பாகிஸ்தான் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின்படி சிந்து நதியில் இருந்து 80 சதவீத நீரை பாகிஸ்தான்தான் பயன்படுத்தி வருகிறது.

இந்த ஒப்பந்தத்தின் படி, இந்தியாவும், பாகிஸ்தானும் ஆண்டுக்கொரு முறை பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். ஆனால், கடந்த ஆண்டு இந்த பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. அதற்கு முந்தைய ஆண்டான 2015ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது.

கடந்த ஆண்டு நடைபெற்ற உரி தாக்குதலில் இராணுவ வீரர்கள் 18 பேர் உயிரிழந்தனர். இதனால், அந்நாட்டுடனான பேச்சுவார்த்தையை நிறுத்தி வைக்க இந்தியா முடிவு செய்ததால் பேச்சுவார்த்தை தடைபட்டு போனது.

இத்தகைய சூழலில், ஓராண்டுக்கு பிறகு இந்தியா - பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயான சிந்து நதி நீர் பங்கிடு தொடர்பான பேச்சுவார்த்தை தற்போது மீண்டும் நடைபெற்று வருகிறது.

இந்த பேச்சுவார்த்தையின் போது பாகிஸ்தான் வழியாக பாயும் நதிகளின் மீது இந்தியா 3 நீர்மின் திட்டங்களை கொண்டு வருவது தொடர்பாக பாகிஸ்தான் தனது கவலையை தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டங்கள் 1960ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தை மீறுவதாக பாகிஸ்தான் கருதுகிறது.

### உலக கோடீஸ்வரர்கள் பட்டியல்:

## பில்கேட்ஸ் முதலிடம் டிரம்ப் பின்னடைவு



போர்பஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் பில்கேட்ஸ் தொடர்ந்து 4ஆவது முறையாகவும் முதலிடம் பிடித்துள்ளார். அதேபோல அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கடும் சரிவை சந்தித்துள்ளார்.

போர்பஸ் பத்திரிகை இந்தாண்டுக்கான உலக கோடீஸ்வரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் 86 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான சொத்துக்களை கொண்டுள்ள மைக்ரோசாப்ட் அதிபர் பில்கேட்ஸ் முதலிடம் பிடித்துள்ளார். அடுத்ததாக வொரன் பப்பெட் 75.6 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பில் உள்ள சொத்துக்களுடன் இரண்டாமிடம் வகிக்கிறார்.

முதல் 10 இடங்களை பொறுத்தவரை சமூகவலைதள அதிபர்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். அமேசான் இணைய வர்த்தக நிறுவன அதிபர் ஜெப் பிஸோஸ் மூன்றாமிடமும், பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஸுக்கர்பெர்க் 5ஆம் இடமும், ஆரக்கிள் இணை நிறுவனர் லார்ரி எல்லிசன் 7ஆவது இடமும் பிடித்துள்ளனர்.

உலக கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டிலிருந்து 13 சதவிகிதம் அதிகரித்திருப்பதாகவும் இந்த பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் மட்டும் 565 கோடீஸ்வரர்கள் உள்ளனர். அடுத்ததாக சீனாவில் 319 கோடீஸ்வரர்கள் உள்ளனர்.

டிரம்ப் கடந்த ஆண்டில் இருந்து 220 இடங்கள் பின்தங்கி பட்டியலில் 544ஆவது இடத்திலுள்ளார்.

## எகிப்து, கட்டார் உள்ளிட்ட 8 நாடுகளிலிருந்து மின்னணு சாதனங்கள் எடுத்து வர அமெரிக்கா தடை



எகிப்து, கத்தார் உள்ளிட்ட 8 நாடுகளிலிருந்து லேப்டாப் உள்ளிட்ட மின்னணு சாதனங்களை எடுத்து வர அமெரிக்கா தடை விதித்துள்ளது.

அமெரிக்காவில் நுழைய ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், யெமன் மற்றும் சிரியா ஆகிய நாடுகளுக்கு விதிக்கப்பட்ட விசா தடை பல்வேறு சர்ச்சைகளை எழுப்பியது.

இந்நிலையில், எகிப்து, கட்டார் உள்ளிட்ட 8 நாடுகளிலிருந்து லெப்டொப், கெமரா மற்றும் ஐ-பேட், DVD பிளேயர், வீடியோ கேம் சாதனங்களை விமானத்தில் எடுத்து வருவதற்கு அமெரிக்க அரசு தடை விதித்துள்ளது. மொபைல்கள், மருத்துவ உபகரணங்கள் போன்ற பொருட்களுக்கு இந்த தடையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது

எகிப்து, ஜோர்தான், குவைத், மொராக்கோ, கட்டார், சவூதி அரேபியா, துருக்கி மற்றும் ஐக்கிய அரபு நாடுகள் போன்ற நாடுகளிலிருந்து மேற்சொன்ன பொருட்களை எடுத்து வரக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இத்தடை அந்நாட்டில் அமுலுக்கு வருகிறது. எனினும், இதற்கான காரணம் என்னவென்பது இதுவரை வெளியாகவில்லை.

## பக்தாத்தில் கார் குண்டுவெடிப்பு: 23 பேர் பலி; 45 பேர் படுகாயம்

ஈராக்கில் பாக்தாத் நகரில் மேற்கொள்ளப்பட்ட கார் குண்டு தாக்குதலில் 23 பேர் உயிரிழந்தனர். 45 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பக்தாத்தின் அமில் மாவட்டத்தில் மக்கள் அதிகம் கூடும் சந்தைப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த காரொன்றிலிருந்தே குண்டுகள் வெடித்து சிதறியுள்ளன. இதில் படுகாயமடைந்த 45 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குண்டு வெடிப்புக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

ஐ.எஸ் தீவிரவாதிகள் கட்டுப்பாட்டிலிருந்த மொசூல் நகரை ஈராக் அரசு படைகள் அன்மையில் மீட்டன. மேலும் ஐ.எஸ் இயக்கத்தை முழுமையாக ஒழிப்பதற்கு ஒரு இலட்சக்கணக்கான அரசு படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தீவிரவாதிகள் கார் குண்டை வெடிக்க செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

## சிறையில் சுயசரிதை எழுதும் சின்னம்மா



பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலா சுயசரிதை எழுதும் முயற்சியில் ஈடுபட்டுள்ளாராம். அத்துடன் சிறைக்குள்ளேயும் தியானத்தை தொடர்ந்து மேற்கொள்கிறாராம் சசிகலா.

ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் சசிகலா அரசியலில் குதித்தார். ஜெயலலிதாவைப் போல நடை உடை சிகை அலங்காரம் செய்து கொண்டார். ஆனால், இதை தமிழக மக்கள் எவருமே ஏற்றுக் கொள்ளவில்லை. இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாத சசிகலா அ.தி.மு.க. பொதுச்செயலராகி முதல்வர் நாற்காலியில் அமரவும் முயற்சித்தார். ஆனால் வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்த வழக்கில் உச்சநீதிமன்றம் சிறை தண்டனையை உறுதி செய்ததால் முதல்வர் பதவி கனவு தவிடுபொடியானது.

ஜெ. கல்லறை சபதம்

சென்னையிலிருந்து பெங்களூரு சிறைக்கு சசிகலா போன நாளில் அவர் அரங்கேற்றிய நாடகங்கள் ஏராளம்.. ஜெயலலிதா நினைவிடத்துக்குப் போய் மூன்று முறை ஓங்கி அடித்து கர்ண கொடூரமாக சபதமெல்லாம் எடுத்தார். எம்ஜிஆர் இல்லத்தில் தியானம் அப்படியே திடீரென எம்ஜிஆர் வாழ்ந்த ராமாவரம் இல்லத்துக்குப் போய் தியானத்தில் ஈடுபட்டார். பெங்களூரு சிறைவாசலில் கணவர் நடராஜனை கட்டிப்பிடித்து கதறி அழுதார். அங்கேயும் தியானம் சிறைக்குள் போன சசிகலா தினமும் அதிகாலையிலேயே எழுந்து விடுகிறாராம். அப்படியே ஒரு வோக்கிங் போய் அங்கேயும் தியானத்தை தொடர்கிறாராம்.

சுயசரிதை அதன் பின்னர் ஜெயில் மேட் இளவரசியுடன் அமர்ந்து பழைய சம்பவங்கள், நிகழ்வுகளை பேப்பரில் எழுதுகிறாராம். இவை எல்லாவற்றையும் தொகுத்து சுயசரிதை ஒன்றை வெளியிடும் முடிவில் இருக்கிறாராம் சசிகலா.

நாட்டை உலுக்கிய ஷீனா போரா கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியான பீட்டர் முகர்ஜி சிறையில் தம்முடைய சுயசரிதை எழுத லெப்டொப் வேண்டும் என கேட்டிருந்தார். அதேபோல் தாமும் கேட்கலாமா என்கிற யோசனையில் இருக்கிறாராம் சசிகலா.

## அயர்லாந்தின் முதல் துணை பிரதமர் மார்ட்டின் மெக்கின்னஸ் காலமானார்



ஆயுதப் புரட்சியின் மூலம் பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து வடக்கு அயர்லாந்தை விடுவிக்க போராடிய அந்நாட்டின் முதல் துணை பிரதமராக பதவி வகித்த மார்ட்டின் மெக்கின்னஸ் நேற்று காலமானார்.

வடக்கு அயர்லாந்திலுள்ள லண்டன்டெர்ரி பகுதியில் 23-5-1950 அன்று பிறந்த மார்ட்டின் மெக்கின்னஸ், பிரித்தானிய காலனி ஆதிக்கத்திலிருந்து தனது தாய்நாட்டை விடுவிப்பதற்காக தலைமறைவு புரட்சியாளராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து வழிநடத்தினார்.

அயர்லாந்து விடுதலைப் படையின் தளபதியாக தன்னை பிரகடனப்படுத்தி கொண்ட இவரது கோரிக்கைக்கு உள்நாட்டில் வாழும் பிராட்டஸ்ட்டன்ட் பிரிவு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இவரது ஆயுதப் புரட்சியால் பொதுமக்கள் உட்பட சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்ததையடுத்து பிரித்தானிய, அமெரிக்கா ஆகிய நாடுகள் இவரை தீவிரவாதியாக அப்போது அறிவித்திருந்தன.

பின்னாளில், பிரித்தானிய தரப்பினருடன் சமரசம் செய்துகொண்டு சின் பெயின் என்ற பெயரால் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்த அமார்ட்டின் மெக்கின்னஸ், கடந்த 1980ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தனது கட்சி வேட்பாளர்களை நிறுத்தி, வெற்றிபெற்று அங்கு ஆட்சி அமைத்தார்.

வடக்கு அயர்லாந்தின் ஆட்சி அதிகாரம் அனைத்தும் பிரித்தானியாவிடமிருந்த நிலையில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அயர்லாந்தின் முதல் துணை பிரதமர் (தலைமை அமைச்சர் ) என்ற பெருமைக்குரியவராக விளங்கினார்.

கடந்த 2007ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை இந்த பதவியில் நீடித்த மார்ட்டின் மெக்கின்னஸ் புற்றுநோய் சார்ந்த விஷக்கிருமி தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று சிகிச்சை பலனின்றி காலமானார்.

## ஊடகவியலாளர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இராணுவ புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.குறித்த நபர், குற்றபுலனாய்வு பிரிவினரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்படி, ஊடகவியலாளர் கீத் நொயாரை தாக்கி துன்புறுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள இராணுவ புலனாய்வு பிரிவின் உறுப்பினர், நேற்று கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய வேளை, எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி, தெகிவளை பிரதேசத்தில், கீத் நொயரின் வீட்டுக்கு முன்பாக வான் ஒன்றில் வந்த அடையாளம் தெரியாத சிலர், ஆயுதங்களை காட்டி அச்சுறுத்தி, அவரை தாக்கியுள்ளனர்.இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட குற்றவிசாரணை திணைக்களம், ஏற்கெனவே, மூன்று இராணுவ உறுப்பினர்களை கைது செய்திருந்தது.

இந்நிலையில், தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவந்த விசாரணைகளின் அடிப்படையில், குறித்த இராணுவ கோப்ரல், நேற்று இரவு கைது செய்யப்பட்டார்.. கைதுசெய்யப்பட்டவரை, கல்கிசை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## முறையற்ற ...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அது மட்டுமன்றி நயகரா நீர்வீழ்ச்சியை அண்டிய நீரேந்துப் பிரதேசங்கள் போன்றவற்றில் பாரிய கைத்தொழில் பேட்டைகள் உருவாகுவதற்கும் இது வழி வகுத்ததாக கலாநிதி ஸப்ஹி ஸாலிஹ் என்ற அறிஞர் குறிப்பிடுகிறார்.

நீர்வளத்தை இஸ்லாம் பொதுவுடமையாக்கியதன் விளைவாகத்தான் தொழில்நுட்பம், கைத்தொழில் துறைகள் என வாழ்வின் பல்வேறுபட்ட கோணங்களிலும் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டு நவீன நாகரிகம் இன்றுள்ள உச்ச நிலையை அடைந்தது என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

இருப்பினும் இலாபத்தை மாத்திரம் நோக்காகக் கொண்ட முதலாளித்துவ சக்திகளும், மனித குலத்தின் எதிரிகளான பேராசை பிடித்த யூத சக்திகளும் உலக நாடுகளில் விரவிக் காணப்படும் நீர்வளங்களைத் திருடி தமதாக்கிக் கொள்வதில் முனைப்போடு ஈடுபட்டு வருகின்றன. இந்நிலை நீர்வளம் ஒரு பொதுச் சொத்து. ஒவ்வொருவரும் தமக்குரிய பங்கையே பெற்றுக் கொள்ள உரிமையுடையோர் ஆவர் என அல்குர்ஆன் பிரகடனப்படுத்திய இறைகட்டளையை பகிரங்கமாக மீறும் செயலாகும். ஸமூத் சமூகத்தினர் நீர்வளத்தில் தமக்குரிய பங்கோடு ஒட்டகத்திற்குரிய பங்கையும் தமதாக்கிக் கொள்ளும் நோக்கோடு தான் அதனை அறுத்துக் கொலை செய்தனர். அதனால் ஸமூது சமூகம் இறை நிந்தனைக்கு ஆளாகி, பாரிய சப்தத்தின் மூலம் அழிக்கப்பட்டனர்.

இந்தவகையில் முழுமனித குலத்திற்குமான நீர்வளத்தைத் தனியுடமையாக்குவதையோ, பதுக்குவதையோ, மாசுபடுத்துவதையோ, குறித்த தமக்குரிய அளவை விடவும் அதிகம் பயன்படுத்தி வீண்விரயம் செய்வதையோ இஸ்லாம் அனுமதிப்பதில்லை. தமக்குரிய பங்கை விட அதிகம் பயன்படுத்தி வீண்விரயம் செய்வோனை அல்குர்ஆன் (17:27) ஷைத்தானிய சக்திகளின் சகபாடிகள் என வர்ணிக்கின்றது.

நீதி நேர்மை என்பவற்றை அடிப்படையாகக் கொள்ளாத நீர் வளப் பங்கீடானது மனித குல நாகரீகத்திற்கு பேரழிவையே கொண்டுவந்து சேர்க்கும். இதோ அந்த அபாயம் குறித்த அல்குர்ஆனின் எச்சரிக்கை.

உங்களுடைய நீர்வளம் (நீங்கள் பெற முடியாதவாறு) பூமியினுள் (இழுக்கப்பட்டு வெகு ஆழத்தில்) சென்றுவிட்டால், பொங்கி ஓடும் நீரை உங்களுக்குக் கொண்டு வருபவன் யார்?...

(அல் முல்க் : )

தேவைக்கு மிஞ்சிய உற்பத்தி, கட்டுப்பாடில்லாத நுகர்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள நலிவுற்ற நவீன நாகரிக சமுதாயங்கள் முறையற்ற நீர்வளப் பயன்பாட்டின் காரணமாக எதிர்கொள்ள இருக்கும் மாபெரும் நாசகார அழிவு குறித்து மேலும் ஒரு அல்குர்ஆன் வசனம் கீழ்வருமாறு குறிப்பிடுகிறது.

வானத்திலிருந்து அளவோடு தண்ணீரை நாம் இறக்கி வைக்கிறோம். அதன் பின்னர் அதனைப் பூமியில் தங்குமாறு செய்கிறோம். நிச்சயமாக அதனை (பூமிக்குள்) இழுக்கப்பட்டுப் போக்கி வைக்கவும் நிச்சயம் நாம் ஆற்றலுடையோர் (ஆவோம்) (அல்-முஃமின் : 18)

சிறுகச் சிறுக வீணாக சிந்தும் சிறிய நீர்த்துளிகளால் தான் நவீன நாகரிகம் நாளை துடைத்தெறியப் படப் போகிறது என்ற இறைவேதத்தின் அபயக் குரல் மனித கோடிகளின் இதயக் கதவுகளைத் திறக்கச் செய்யும் நேரம் இன்னும் வரவில்லையா?!! (1) ஷரகுல் அகீததுத் தஹாவியா, இமாம் தஹாவி, பக் : 66

(2) பார்க்க : ஸறா அந்நஹ்ல் : 89

## அளுத்கம கலவரத்தில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அத்தோடு, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினர்களும் அரசுக்கான தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

கட்சிகள், இனமத வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகவே நாட்டின் பொருளாதாரம் காணப்படுகின்றது. கட்சிகளுக்கிடையில் வெவ்வேறு கருத்துக்கள் காணப்பட்டாலும் பொருளாதாரம் என்று வரும் போது ஒருமித்த கருத்துடன் பயணித்தால் மட்டுமே வெளிநாட்டு முதலீடுகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை சிறப்பான பாதையில் கொண்டுசெல்ல முடியும்.

ஆனால், அந்நிலைமை நாட்டில் இல்லை. நாளுக்கு நாள் டொலரின் பெறுமதி அதிகரித்துச் செல்வதால் பொருட்களின் விலைகளும் அதிகரித்துவருகின்றன. இந்நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகையை நாட்டில் அதிகரிக்க வேண்டும். அதேநேரம், இன்னும் நாம் தேயிலை, இறப்பர் மற்றும் ஆடைகள் தவிர்ந்து ஏனைய பொருட்களை ஏற்றுமதி செய்வதிலும் பின்தங்கியே காணப்படுகிறோம். இந்நிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி அந்நிய செலாவணியை அதிகரிக்க வேண்டும். இதற்கு எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்.

அரசால் மட்டும் இப்பயணத்தை தொடர முடியாது. இதனை எதிர்த்தால் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது என்பதை உணர்ந்து ஒருங்கிணைந்த எதிரணியினரும் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதுமட்டுமன்றி, அளுத்கம கலவரம் இடம்பெற்று 1000 நாட்களைக் கடந்துள்ள போதிலும் அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்காமை தொடர்பிலும் இச்சபையின் கவனத்துக்கு நாம் கொண்டுவர வேண்டும். இதில், மூவர் பலியாகியும் 15 பேர் காயமடைந்தும், 280 குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள போதிலும் இதுதொடர்பில் அரசு எந்த வித சட்ட நடவடிக்கையையும் எடுக்கவில்லை. வெலிக்கடைச் சிறைச்சாலை சம்பவம், சாலாவ வெடிவிபத்து போன்ற பல சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ள, வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் அளுத்கம மக்களுக்கு மட்டும் இன்னும் நீதிக்கிடைக்காமை கவலைக்குரியதாகும்.எனவே, இப்பிரச்சினையை தீர்க்கும் நோக்கில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் அரசு நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம் என்றார்.

## இனவாதத்தை கக்கும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தரணி எம்.எம்.சுஹைர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் உத்தர பிரதேச முதலமைச்சராக மதகுரு யோகி ஆதித்யநாத் நியமிக்கப்பட்டது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தீவிர இந்துத்துவவாதியாக இருந்த மோடியை சர்வதேச ஊடகங்கள் இந்தியாவின் பிரதமராக்கியது போன்றே 12க்கு மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் உள்ள ஆதித்யநாத்தையும் இன்று சர்வதேச ஊடகங்கள் சிறந்தவராக சித்தரிக்க ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இம்மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற உத்தர பிரதேச தேர்தலை தொடர்ந்து 325 பேர் உள்ள மாநில சட்ட சபையில் தரமான பொருத்தமான எவ்வளவோ உறுப்பினர்கள் இருக்க இவரை மோடி நியமித்திருப்பது தீவிர இனவாதத்துக்கு துணைபோவதைக் காட்டுகின்றது. ஆதித்யநாத் தீவிர முஸ்லிம் எதிர்ப்பு பிரசாரத்தில் ஈடுபட்ட ஒருவர் என்பதற்கு அவரது சில பிரசாரங்களே சான்றாகும். சந்தர்ப்பம் கிடைத்தால் முஸ்லிம்களின் பள்ளிவாசல்களில் சிலைகளை வைப்பதற்கும், அடக்கப்பட்டுள்ள முஸ்லிம் பெண்களை தோண்டியெடுத்து கற்பழிப்பதற்கும் தயங்கப்போவதில்லை என்றும் பகிரங்கமாக பிரசாரம் செய்த ஒருவர். ஓர் இந்துப் பெண்ணை முஸ்லிம் திருமணம் செய்தால் 100 முஸ்லிம் பெண்களை இந்து இளைஞர்களுக்கு திருமணம் செய்ய பணித்தவர். இந்து மதத்துக்கோ, அதன் வளர்ச்சிக்கோ இந்திய முஸ்லிம்கள் தடையானவர்கள் அல்ல.

உத்தர பிரதேசத்தில் 420 மில்லியன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் 40 மில்லியன், அதாவது 20 வீதமானோர் முஸ்லிம்கள். கடந்த 2002 ஆம் ஆண்டு மோடி முதலமைச்சராக இருக்கும்போது நடைபெற்ற இனவாத கலவரத்திலும் 2000க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். சர்வதேச ஊடகங்கள் மோடியை நல்லவராக சித்தரித்து ஆட்சிக்கு கொண்டுவந்தனர். இப்போது 12 தீவிர குற்றச்சாட்டுக்களுக்குள்ளான ஒருவரை மோடி முதலமைச்சராக நியமித்துள்ளார். மோடி இனவாதத்தை ஆதரிக்கிறார். இது முழு பிராந்தியத்துக்கும் பாதகமாக அமையும் என்பதை இலங்கையர்களும் புரிந்துவைத்திருக்க வேண்டும்.

## கிண்ணியாவிற்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கிண்ணியா, மூதூர் மற்றும் உப்புவெளியிலேயே இந்நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதற்கு, 2016 ஆம் ஆண்டு இறுதியில் இருந்து நிலவிவந்த சிறு மழை வீழ்ச்சிகள் மற்றும் கால நிலை மாற்றங்கள் என்பனவே பிரதானக் காரணியாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், இதனைத் தொடர்ந்து உரிய விதத்தில் கழிவகற்றல் இடம்பெறாதமை, டெங்கு நோய் பரவும் பகுதிகளை கண்டறிந்து அழிக்காமை மற்றும் பாடசாலைகளில் பரவும் டெங்கினை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காதமையால் தான் தற்போது நாடளாவிய ரீதியாக 22, 562 பேர் பாதிக்கப்பட்டும் 39 பேர் பலியாகியுமுள்ளனர்.

அத்தோடு, கிண்ணியா பிரதேசத்தில் டெங்கின் தீவிரம் அதிகமாக காணப்படுகின்றமையால் 180 இலட்சம் ரூபா பெறுமதியில் அவசர சிகிச்சைப் பிரிவொன்றை ஸ்தாபிக்கவும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, அங்கு நிலவும் வைத்தியர், தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் மற்றும் நோயாளர்களை துரிதமாக அடையாளம் காணும்வகையில் ஸ்கேன் இயந்திரத்தை பெற்றுக் கொள்ளல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார்.

## இலங்கை தொடர்ந்தும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உலக மகிழ்ச்சி தினம் மார்ச் 20ஆம் திகதி கொண்டாடப்பட்டதை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபை, உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலை வெளியிட்டுள்ளது. ஒரு நாட்டின் தனி நபர் வருமானம், ஆரோக்கியம், ஆயுட்காலம், சமூக ஆதரவு, சுதந்திரம் ஆகியவை மகிழ்ச்சிக்கான அளவு கோலாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் 155 நாடுகளில் ஆய்வு நடத்தப்பட்டு பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில் 2017ஆம் ஆண்டுக்கான உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் டென்மார்க்கை பின்னுக்கு தள்ளி நோர்வே முதலிடத்தை பிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2ஆவது இடத்தில் டென்மார்க்கும், 3, 4, மற்றும் 5ஆம் இடங்களில் பின்லாந்து, ஐஸ்லாந்து, ஸ்வீடன் நாடுகளும் உள்ளன. உலகின் வல்லரசு நாடான அமெரிக்கா இந்தப் பட்டியலில் 14ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்த பட்டியலில் இலங்கை 120 இடத்துக்கு தெரிவாகியுள்ளது. 2013 - 2017ஆம் ஆண்டு வரை இலங்கை 117ஆவது இடத்திலேயே இருந்தது. எனினும், இந்த ஆண்டு 3 இடங்கள் பின்தள்ளப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் இந்த பட்டியலில் இந்தியாவை விட 42 இடங்கள் முன்னிலை பெற்று பாகிஸ்தான 80ஆவது இடத்திலுள்ளது. இந்தியாவுக்கு 122ஆவது இடமே கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு இருந்த 118ஆவது இடத்திலிருந்து 4 இடங்கள் பின்தங்கியுள்ளது. தெற்கு சூடான், லைபீரியா, ருவான்டா, தான்சானியா, புரூண்டி மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகள் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் கடைசி இடங்களில் உள்ளன.

இதில் முதல் 10 இடங்களைப் பிடித்த நாடுகள் வருமாறு:- 1.நோர்வே, 2.டென்மார்க், 3.ஐஸ்லாந்து, 4.சுவிட்சர்லாந்து, 5.பின்லாந்து, 6.நெதர்லாந்து, 7.கனடா, 8.நியூசிலாந்து, 9.அவுஸ்திரேலியா, 10.ஸ்வீடன்.

## பலஸ்தீன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கண்டித்து தனது உரையை தொடங்கிய ஷமா, இந்திய இராணுவம் பெல்லட் வகை துப்பாக்கியை பயன்படுத்தி, அப்பாவி காஷ்மீரிகளின் உயிரையும் கண் பார்வையையும் இல்லாமலாக்கியிருப்பதை கண்டித்தார்.

மேலும், பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் கட்டவிழ்த்து விட்டிருக்கின்ற வன்முறைகளையும் தனது உரையில் ஷமா முயிஸ் கண்டித்தார். இஸ்ரேல் 2000 ஆம் ஆண்டு முதல் 2015 செப்டம்பர் வரையிலும் 8500 பலஸ்தீன சிறுவர்களை கைது செய்திருக்கின்றது என்று அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் சிறுபான்மையினர் தொடர்பான அறிக்கையாளர் ரீட்டா ஐசாக், ஷமாவின் உரையை பாராட்டியுள்ளார். 15 வயமதன ஷமா முயிஸ், பிரான்ஸின் College Saint Exupery கல்லூரியில் கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் டெங்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கிழக்கு மாகாண சபையில் மாதாந்தக் கூட்டம் நேற்று நடை பெற்ற போது கூட்டத்தை ஒரு மணி நேரம் இடைநிறுத்தி அவசர கூட்டமொன்றை நடத்திய போதே இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

கிழக்கில் வேகமாக பரவிவரும் டெங்கு நோயைக் கட்டப்படுத்துவது பற்றி இங்கு ஆராயப்பட்டது.

மாகாண சபைக் கட்டடத்தில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் மாகாண சபையின் தவிசாளர், மாகாண அமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், முதலமைச்சின் செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் பணிப்பாளர்கள் உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதமாகவும் வினைத்திறன் மிக்கதாயும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் உள்ள தடங்கல்கள் மற்றும் ஆளணிப் பற்றாக்குறைகள் தொடர்பில் கிழக்கு முதலமைச்சர் கேட்டறிந்தார். டெங்கு ஒழிப்பு செயற்பாட்டின்போது ஆளணி மற்றும் வாகனப் பற்றாக்குறைகள் இருப்பின் அவற்றை உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நிவர்த்திசெய்து டெங்கு ஒழிப்பை துரிதப்படுத்துமாறும், அத்துடன் டெங்கு பரவுவதற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிரான எவ்வித தயவு தாட்சணையும் இன்றி கடுமையாக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் கிழக்கு முதலமைச்சர் நசீர் அஹமட் இதன் போது அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## மேல் நீதிமன்றமும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிணை வழங்க கொழும்பு மேல் நீதிமன்றம் மறுத்துள்ளது.

பிணை வழங்குமாறு கோரி கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டமையை எதிர்த்து வீரவன்ச கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பிணை கோரி மனு தாக்கல் செய்திருந்தார்.

வீரவன்சவின் இந்த மனுவை ஆராய்ந்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுவாராச்சி, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவானது நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு அமைய வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.இதனடிப்படையில், வீரவங்சவின் பிணை கோரிக்கையை நிராகரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வருடம் ஜனவரி மாதம் 10ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப்பிரிவினரால் கைதசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 40 வாகனங்களை தவறாக பயன்படுத்தியதாக விமல் வீரவன்ச மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.இதன்மூலம் 90 மில்லியன் ரூபா இழப்பு அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.கைது செய்யப்பட்ட விமல் வீரவன்ச நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தமக்கு பிணை வழங்குமாறு கோரி விமல் வீரவன்ச தாக்கல் செய்த மனு நேற்றைய தினம் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதியினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

## சிறந்த நிதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதனை நிலையான வளர்ச்சியுடன் கொண்டு சென்றமையை கௌரவிக்கும் நோக்கில் இவ்விருது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு வழங்கப்படவுள்ளது.பிரித்தானியாவின் த பேங்கர் சஞ்சிகையில் ஆசிய பசுபிக் வளையத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான சிறந்த நிதி அமைச்சராக பெயரிடப்பட்டுள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கான விருது எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரித்தானியாவில் வழங்கப்படவுள்ளது.

புதிய பொருளாதார புரட்சி ஒன்றிற்காக இலங்கை மக்கள் மத்தியில் உள ரீதியிலானா மாற்று சிந்தனைகளை தோற்றுவிக்கும் வகையிலான பொருளாதார கொள்கையினை நடைமுறைப்படுத்தியமைக்காக முதலமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு இவ்விருதினை வழங்கவுள்ளதாக் பிரித்தானிய த பேங்கர் சஞ்சிகை அறிவித்துள்ள நிலையில், விருதை பெற்றுக்கொள்வதற்காக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க இன்று பிரித்தானியாவிற்கு செல்லவுள்ளார்.

பொருளாதார அபிவிருத்திக்காக வழங்கிய பங்களிப்பினை கௌரவிக்கும் நோக்கில், பிரித்தானிய த பேங்கர் சஞ்சிகையினால் வருடாந்தம் இந்த விருது வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்படுகின்றது.இதன்படி ஆண்டின் சிறந்த நிதி அமைச்சர், சிறந்த மத்திய வங்கி, சிறந்த வங்கி, சிறந்த முதலீடு மற்றும் பிராந்திய ரீதியாக சிறந்த முதலமைச்சர் போன்ற விருதுகள் இதன்போது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச நீதிபதிகள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விசேட அறிக்கை ஒன்றை விடுத்தே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

தெற்காசிய மற்றும் சார்க் நாடுகளின் கொள்கைக்கு இணங்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஒருபோதும் நாம் நாட்டுக்குள் அனுமதிக்கப்போவதில்லை.

அதேநேரம், மஹிந்த அரசின் பிரதிநிதியாக 2014 இல் ஜெனீவா சென்றிருந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சரான ஜி.எல். பீரிஸினால் தான் சர்வதேச விசாரணை எனும் கோஷம் எழுந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றம் நேற்று பிற்பகல் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் என்பவற்றைத் தொடர்ந்து 23 இன் கீழ் 2 ஆம் இலக்க நிலையியற் கட்டளைகளின் கீழ், ஒருங்கிணைந்த எதிரணித் தலைவரான தினேஷ் குணவர்த்தனவினால் முன்வைப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போது பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், 2015 ஆம் ஆண்டு இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட நாட்டுக்கு எதிரான பிரேரணை தொடர்பில் ஒருங்கிணைந்த எதிரணி சார்பில் நாம் தொடர்ந்தும் எமது எதிர்ப்புக்களை வெளியிட்டுவந்தோம்.

இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமைக்கு இணங்க, இத்தீர்மானம் நிறைவேற்றப்படுமானால் ஒற்றையாட்சிக்கும் உள்நாட்டுப் போரை நிறைவுக்குக் கொண்டுவந்த இராணுவத்தினருக்கும் பாரிய ஆபத்தாக அமையும் எனத் தெரியவந்தள்ளது. அத்தோடு, இத்தீர்மானத்தில் அரசமைப்புக்கு முரணான வகையில் வெளிநாட்டு நீதிபதிகளின்; பங்களிப்புடன் கலப்பு நீதிமன்றமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நாட்டுக்கு பாதகமான தீர்மானம் குறித்து அரசின் நிலைப்பாடு தான் என்ன? என்று தினேஷ் எம்.பி. பிரதமரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைவாக நாட்டில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள், மனித உரிமை விவகாரங்களில் காணப்படும் முன்னேற்றங்கள் தொடர்பில் பாராட்டப்பட்டிருந்ததோடு கடந்த கால தவறுகளை சரிசெய்யும் நோக்கில், அரசு பக்கச்சார்பின்றி பொறுப்புக் கூற வேண்டும் என்றும் மனித உரிமை மீறல் விவகாரங்களில் மீளிணக்கம் வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகளாலும் நாட்டில் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த அரசானது மோசடி, அதிகார துஸ்பிரயோகத்தை செய்தது போன்ற குற்றச்சாட்டுக்களும் இதில் முன்வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதோ ஒழிய அதில், சர்வதேச நீதிபதிகள் தொடர்பிலோ கலப்பு நீதிமன்றம் குறித்தோ எந்த ஒரு வலியுறுத்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. இதற்கிணங்க எம்மால் முன்வைக்கப்பட்ட நீதிக்கட்டமைப்பையும் சர்வதேசம் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது.

நாமும் சர்வதேச அலோசகர்களின் ஒத்துழைப்பு வேண்டும் என்று கூறினாலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கோ, சர்வதேச நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுக்கோ நாட்டில் ஒருபோதும் அனுமதி அளிக்கப்போவதில்லை. இந்த நிலைப்பாட்டினை நாம் பலதடவைகள் வலியுறுத்திவிட்டோம்.

போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை ஒற்றையாட்சிக்கு பாதிப்பேற்படாத வகையிலும் எமது அரசமைப்புக்கு உட்பட்டுமே இடம்பெறும்.

மனித உரிமைகள் பேரவையில் மனித உரிமைகள் ஆணையாளர் சுல் ஹுசைனால் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் கலப்பு நீதிமன்றம் குறித்து சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலும் ஐ.நா. தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றம் தொடர்பில் எந்தவொரு முன்மொழிவுகளும் இல்லை.

இந்நிலையில், இதனை முழுமையாக வாசிக்காமல் தான் இவர்கள் அரசுக்கு எதிராக குரலெழுப்பி வருகிறார்கள். எனினும், நாம் இந்நிலைப்பாட்டில் மிகவும் தெளிவானதொரு நிலைப்பட்டில் தான் இருக்கிறோம். யார் எவ்வாறான வலியுறுத்தல்களை மேற்கொண்டாலும் தெற்காசிய மற்றும் சார்க் நாடுகளின் கொள்கைக்கு அமைய கலப்பு நீதிமன்றத்தை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவே மாட்டோம்.

2009 ஆம் ஆண்டு யுத்த நிறைவுக்குப் பின்னர் சர்வதேச விசாரணை ஒன்று அவசியம் என்றும் 2014 ஆம் ஆண்டு இது தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்றும் கடந்த அரசே கூறியிருந்தது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் 2014 இல் ஜெனீவா சென்றிருந்தபோது திருகோணமலை மற்றும் மூதூர் விவகாரங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறும் என்று உறுதியளித்ததுடன், அதே ஆண்டு இதுவிவகாரம் தொடர்பில் பாராளுமன்றில் பிரேரணையொன்றும் நிறைவேற்றப்பட்டது. இவற்றுக்கெல்லாம் பின்னரே சர்வதேச விசாரணை எனும் கோஷம் எழுந்தது. இவற்றையெல்லாம் மறந்து தான் இவர்கள் தற்போது எமக்கெதிராக கூச்சலிடுகிறார்கள் என்றார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

## பி.எஸ்.எல் சூதாட்ட சர்ச்சை:
# பாகிஸ்தான் வீரர்கள் ஐவருக்கு வெளிநாடு செல்லத் தடை



டுபாயில் கடந்த மாதம் 7ஆம் திகதி ஆரம்பமான 2ஆவது பாகிஸ்தான் சுப்பர் லீக் டி20 தொடரில் இஸ்லாமாபாத் யுனைடெட் அணிக்காக விளையாடிய சர்ஜீல் கான், மொஹமட் இர்பான் மற்றும் காலித் லத்தீப் ஆகிய வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டப்பட்டுள்ள நிலையில், இதுதொடர்பிலான விசாரணைகள் தற்போது மும்முரமாக இடம்பெற்றுவருகின்றன.

இந்த நிலையில் ஸ்பாட் பிக்சிங் சூதாட்டத்தில் சிக்கிய 5 வீரர்கள் நாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் உள்துறை மந்திரி நிசார் அலி கான் இந்த நடவடிக்கையை எடுத்து உள்ளார். பாகிஸ்தான் பிரிமீயர் லீக் சூதாட்டம் தொடர்பாக சர்வதேச புலனாய்வு அமைப்பு (எப்.ஐ.ஏ) விசாரணை நடத்தி வருகிறது. இந்த விசாரணை குழு கேட்டுக்கொண்டதன் பேரில் 5 வீரர்களும் நாட்டை விட்டு வெளியே செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வீரர்களின் செல்போன் லேப்டாப்களை வழங்குமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் எப்.ஐ.ஏ கேட்டு உள்ளது. வழக்கு விசாரணைக்காக சாட்சியங்கள் கிடைக்குமா? என்பதற்காக இதை கேட்டுள்ளதாக தெரிகிறது.

இந்நிலையில் குறித்த பாகிஸ்தான் வீரர்களிடம் பாகிஸ்தானின் உளவு அமைப்பான மத்திய புலனாய்வு முகவராண்மை நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இதன் முதற்கட்டமாக வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் இர்பானிடம் நேற்று முன்தினம் விசாரணைகள் இடம்பெற்றுள்ளது. அத்துடன், ஏனைய வீரர்களான சர்ஜீல் கான், காலித் லத்தீப் மற்றும் சஷைப் ஹஸன் ஆகியோரிடம் நேற்றைய தினம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இதேவேளை, மற்றுமொரு சந்தேக நபரான நசீர் ஜம்சீத்தும் இந்த விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டிருந்த போதிலும், அவரது கடவுச்சீட்டு பிரித்தானிய குடிவரவு அதிகாரிகளிடம் இருப்பதனால், அவரை அங்கு கைது செய்து பாகிஸ்தானுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கை ஏ அணியின் தலைவரானார் மிலிந்த

இலங்கை கிரிக்கெட் நிறுவன தலைவர் அணிக்கும் பங்களாதேஷ் அணிக்குமிடையில் இன்று ஆரம்பமாகவுள்ள ஒரேயொரு போட்டிகயைக் கொண்ட ஒருநாள் பயிற்சிப் போட்டியில் இலங்கை அணியின் தலைவராக சகலதுறை வீரர் மிலிந்த சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடருக்கு முன் நடைபெறவுள்ள இப்போட்டிக்காக 12 பேர் கொண்ட குழாமொன்றை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நேற்று அறிவித்தது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இலங்கை ஒருநாள் அணியில் இடம்பெற்ற 4 வீரர்களுக்கு இப்பயிற்சிப் போட்டியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் நிறைவடைந்த இங்கிலாந்து லயன்ஸ் அணியுடனான ஒருநாள் தொடரில் சிறப்பாக விளையாடிய அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குசல் ஜனித் பெரேராவும், சகலதுறை ஆட்டக்காரருமான திசர பெரேரா மற்றும் சச்சித் பத்திரன, தனஞ்சய டி சில்வா ஆகியோர் இப்போட்டியில் விளையாடவுள்ளனர்.



# புரூனே திறந்த மெய்வல்லுனர் போட்டி:
# இலங்கை வீரர்களுக்கு 5 தங்கங்கள்



பீ.எப்.எம் றிஷாட்

2017ஆம் ஆண்டுக்கான புரூனே திறந்த மெய்வல்லுனர் போட்டிகளில் இலங்கை அணி 5 தங்கப்பதக்கங்களையும் ஒரு வெண்கலப்பதக்கத்தையும் வென்றது. இதன்படி இவ்வருடத்துக்கான முதலாவது சர்வதேச மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றிய இலங்கை அணி ஒட்டுமொத்தமாக 6 பதக்கங்களைப் பெற்றுக்கொண்டது.

புரூனே மெய்வல்லுனர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போட்டித் தொடர் கடந்த வாரம் அந்நாட்டின் சென்ட்ரல் மைதானத்தில் நடைபெற்றது. இம்முறை போட்டித் தொடருக்காக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய குழாமில் இடம்பெற்றுள்ள 2 வீரர்களும், 2 வீராங்கனைகளும் பங்குபற்றியிருந்தனர்.

இதில் சாரங்கி சில்வா 2 தங்கங்களை இலங்கைக்குப் பெற்றுக்கொடுத்தார். பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியை 12.47 செக்கன்களில் ஓடிமுடித்து முதலிடத்தையும், பெண்களுக்கான நீளம் பாய்தலில் 5.77 மீற்றர் தூரம் பாய்ந்து முதலிடத்தையும் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தை 21.79 செக்கன்களில் ஓடிமுடித்து சுமேஷ் விக்ரமசிங்க தங்கப்பதக்கத்தையும், தொடர்ந்து ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தை 10.82 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப்பதக்கத்தையும் அவர் பெற்றுக் கொண்டார்.

இந்நிலையில், பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்பந்தயத்தை 2 நிமிடங்களும் 17.73 செக்கன்களில் ஓடிமுடித்து நிஷா ராமநாயக்க தங்கப்பதக்கத்தையும், ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப்பந்தயத்தை 53.36 செக்கன்களில் ஓடிமுடித்து அசங்க இந்திரஜித் தங்கப்பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.





நாடுபூராகவுமுள்ள ஒவ்வொரு மாகாணங்களிலும் விளையாட்டு அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் விளையாட்டுத்துறை அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தின் விளையாட்டு கட்டிடத்தொகுதி திருகோணமலை மெகெய்சர் மைதானத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவின் பங்குபற்றலுடன் கடந்த வெள்ளிக்கிழமை(17) உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. இதன்போது கிழக்கும் மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணான்டோ, கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட், கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் தண்டாயுதபாணி உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் கலந்துகொண்டனர். 85 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ்விளையாட்டுத் தொகுதியின் உள்ளக அரங்கில் கைப்பந்து, கூடைப்பந்து, வலைப்பந்தாட்டம், பெட்மிண்டன் ஆகிய விளையாட்டுக்களை மேற்கொள்ள முடிவதுடன், 80 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 50 மீற்றர் நீளத்தைக் கொண்ட நீச்சல் தடாகமும் இதில் அடங்குகின்றது.





மொரீசியஸ் நாட்டில் இடம்பெற்றுவரும் சர்வதேச விளையாட்டுப் போட்டியில் ஒரு அங்கமான சர்வதேச கடற்கரை கபடி போட்டியில் இலங்கை அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு தங்கப்பதக்கத்தினை வென்றது. சர்வதேச கடற்கரை கபடி போட்டி மொரீசியஸ் நாட்டு தலைநகரான போட் லொய்ஸ் நகரில் கடந்த [19] ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் இலங்கை அணியினை எதிர்த்து ஓமான் நாட்டு அணி மோதியது. இதில் இலங்கை அணி வெற்றி பெற்று சம்பியனானது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மொரீசியஸ் நாட்டு உப ஜனாதிபதி பீ.பீ.வையாபூரி. கௌரவ அதிதியாக மொரீசியஸ் நாட்டுக்கு விஜயம் செய்துள்ள விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி ஹரீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளின் விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட விளையாட்டுத்துறை ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர். பிரதி அமைச்சர் ஹரீஸ் நாட்டுக்கு சர்வதேச போட்டி ஒன்றில் புகழைப் பெற்றுத்தந்த இலங்கை வீரர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். இதன்போது பிரதி அமைச்சர் ஹரீஸ், மொரீசியஸ் நாட்டு உப ஜனாதிபதியினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (றியாத் ஏ. மஜீத்)

# இலங்கை - பங்களாதேஷ் - இந்தியா மோதும் சுதந்திரக் கிண்ணத் தொடர்

## 2018 மார்ச்சில் கொழும்பில் ஆரம்பம்




பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய மூன்று அணிகள் மோதும் இருபதுக்கு - 20 கிரிக்கெட் தொடர் அடுத்த வருடம் மார்ச் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ளது. இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சுதந்திரக்கிண்ணம் என்ற பெயரில் எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரை கிரிக்கெட் தொடர் இடம்பெறவுள்ளது. அத்துடன் போட்டிகள் நடைபெறும் தினம் மற்றும் மைதானங்கள் எதிர்வரும் காலங்களில் அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பி.சரவணமுத்து ஓவல் மைதானத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே இந்த அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியிபட்டது.

இந்நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால, பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் நஸ்முல் ஹுசைன் மற்றும் இந்திய கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ராஹுல் சவுத்ரி ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டித் தொடர் இருபதுக்கு 20 போட்டிகளாக நடைபெறவுள்ளதாக தெரிவித்த இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால, இதில் 7 போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்தார். இதேவேளை, கடந்த 1998ஆம் ஆண்டு இலங்கையின் 50ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட போது இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான சுதந்திர கிண்ண முத்தரப்பு ஒருநாள் போட்டியொன்று நடைபெற்றதுடன், இதில் அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை அணி 6 ஓட்டங்களால் இந்திய அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## டுமினி விலகல்

இந்தியன் பிரிமியர் லீக்கில் டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த தென்னாபிரிக்க அணியின் முன்னணி வீரர் ஜே.பி.டுமினி அணியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். தனிப்பட்ட சொந்த காரணங்களுக்காக தொடரிலிருந்து விலகுவதாக இவர் டேர்டெவில்ஸ் அணி நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளார்.

இவர் கடந்த ஐ.பி.எல். போட்டித் தொடரின் போது டேர்டெவில்ஸ் அணியிக்கு 2 போட்டிகளுக்கு தலைமை தாங்கியுள்ளதுடன், டேர்டெவில்ஸ் அணி சார்பில் அதிக ஓட்டங்களை பெற்ற ஐந்தாவது வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 38 போட்டிகளில் விளையாடி 1015 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்துள்ளார். இந்நிலையில் டுமினிக்கு பதிலாக மற்றுமொரு வீரரை களமிறக்க டேர்டெவில்ஸ் அணி முடிவெடுத்துள்ளது.

ஐ.பி.எல். தொடரில் டுமினி சன்ரைசர்ஸ் ஹைதராபாத், மும்பை இந்தியன்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ் அணிகளுக்காக விளையாடியுள்ளார். 2016இல் டெல்லி அணியின் கேப்டனாக செயல்பட்ட அவர், தற்போது வரை அந்த அணியிலேயே நீடித்து வருகிறார். கடந்த சீசனில் 10 போட்டிகளில விளையாடி 191 ஓட்டங்களையும் குவித்துள்ளார்.

## பாக். அணியில் மீண்டும் கம்ரான்

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் மற்றும் டி20 தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இதில் சுமார் நான்கு வருடங்களின் பின் விக்கெட் காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான கம்ரான் அக்மல் இடம்பெற்றுள்ளார்.

கம்ரான் அக்மல், கடந்த 2013 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்காக ஒருநாள் கிரிக்கெட்டிலும், 2014ஆம் ஆண்டு நடைபெற்ற டி20 உலகக்கிண்ண தொடரிலும் இடம்பிடித்திருந்தார். அதன்பின் அவர் பாகிஸ்தான் அணியில் இடம்பிடிக்கவில்லை. எனினும் அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த பாகிஸ்தான் உள்ளூர் கிரிக்கெட் போட்டி மற்றும் பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் திறமையினை வெளிப்படுத்திய காரணத்தால் அவருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி, மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு நான்கு டி20 போட்டிகள், மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்த தொடர் மார்ச் 26 ஆம் திகதி தொடங்கி மே 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

# ஜடேஜாவுக்கு முதலிடம்: புஜாராவுக்கு இரண்டாமிடம்



சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தய வீரர் ரவீந்திர ஜடேஜா முதலிடம் பிடித்துள்ளார். ஏற்கனவே முதலிடத்தில் இருந்த தமிழக வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

இந்திய மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் டெஸ்ட் தொடரில் சிறப்பாக பந்துவீசி அசத்திய ஜடேஜா அதிக விக்கெட்களை கைப்பற்றினார். இரு அணிகள் விளையாடிய மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரு இன்னிங்சிலும் சேர்த்து மொத்தமாக 9 விக்கெட்களை ஜடேஜா வீழ்த்தினார்.

இதைத்தொடர்ந்து டெஸ்ட் பந்துவீச்சாளர்கள் பட்டியலில் 899 புள்ளிகளைப் பெற்று சர்வதேச டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். ரவிச்சந்திரன் அஸ்வின் 862 புள்ளிகளை பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளார். இந்நிலையில் பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் தொடரில் சிறப்பாகப் பந்துவீசிய இலங்கை அணியின் நட்சத்திர சுழற் பந்துவீச்சாளர் ரங்கன ஹேரத் 854 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். எனவே டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு சுழற்பந்துவீச்சாளர்கள் மூவர் முதல் 3 இடங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர். அத்துடன் இந்திய அணி வீரர் புஜாரா பல சாதனைகளுக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார். குறித்த போட்டியில் புஜாரா இரட்டைச் சதங்கள் பெற்றதுடன், டெஸ்ட் தரவரிசையில் 4ஆம் இடத்தில் உள்ள விராட் கோஹ்லியைக் கடந்து புஜாரா 2ஆம் இடத்துக்கு முதற்தடவையாக முன்னேறினார்.





ஏறாவூர் Goldstar Evr 24 பலம் பொருந்திய அணிகளை கொண்டு நடாத்தப்பட்ட மாபெரும் மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் ஏறாவூர் பக்நாந் மைதானத்தில் முன்னாள் நகர சபை தலைவர் நஸ்லீம் தலைமையில் நடைபெற்றது இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய Yhsc Eravur அணி 8 ஓவர்களில் 58/5 பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஏறாவூர் Lssc Eravur அணி 8 ஓவர்களில் 51/7 பெற்று 7 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இச்சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் விருது தாஹிருக்கு வழங்கப்பட்டதுடன், ஆட்ட நாயகன் விருது நௌசாத்துக்கு வழங்கப்பட்டது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 22ND MARCH 2017